# அருவியூர் நகரத்தார் குரல்

ஆண்டு 26 - 162
சுபகிருது - கார்த்திகை

திங்கள் இரண்டுக்கு ஒன்று
கல்வி பண்பாடு வளர்ச்சி இதழ்

நவம்பர் 2022


# உழைப்பால் உயர்ந்த உத்தமர்



தோற்றம்
18.09.1954

நிறைவு
09.06.2022

**திரு நா. ஜெயராமன் செட்டியார் B.Com., F.C.A., M.A.,**

பூர்வீகம்: கல்லம்பட்டி • கழனிவாசலூருடையார்

நீங்கா நினைவில்...என்றும் அவர்காட்டிய வழியில்...

மனைவி: **தேன்மொழி ஜெயராமன்** B.Sc., M.A.,

மகன்: N.J. ராகுல் கண்ணா B.E., M.S., - E. நாகேஸ்வரி என்ற சுகன்யா B.E., M.S.,

மகள்: N.J. கீர்த்தனா B. Arch., M. Des., - T. விமல்ராஜன் B.E., M.E.,


வெளியீடு

அருவியூர் வடக்குவளவு நகரத்தார்

**கல்வி வளர்ச்சிக் கழகம் (பதிவு)**

பிரான்மலை




Guruji.S.RAJAKUMAR
Business Consultants
Devotional Advisor
+91 944 348 0007

#7, LIGHT HOUSE COMPLEX,
FOUR ROADS, SALEM - 636 009.
CELL : 98427 10545, 93677 10545

3A SANNITHANAM, P54 'VISAKA',
6TH AVENUE, ANNA NAGAR,
CHENNAI - 600 040.
Cell: 81444 10545

WOODLAND CIRCLE,
5, RAJA RAM MOHAN ROY ROAD,
RICHMOND CIRCLE,
BENGALURU - 560 025.
CELL : 90350 10545

MAHILVITHU MAHIL®
MAHA SANNITHANAM

gurusaranam5@gmail.com www.mahilvithumahil.com Google Play: Mahilvithu Mahil

RK.KANE MOZHI
Cell: 91591 10545

My DRESS CODE™
Just different. More unique..

SILK SAREES · FANCY SAREES · CHUDIDHAR · TOPS

mydresscodeslm@gmail.com /mydresscodeslm

My DESIGN STUDIO™
boutique style stitching

"We undertaking All type of Stitching Work"

❖ Aari Work ❖ Designer Blouse ❖ Customized Stitching

#221, SURYA NIVASS, MAIN ROAD,
OPP. JAIN TEMPLE,
SHANKAR NAGAR, SALEM - 636 007.

Mob. : 98428 10545
76676 10545

உ
நமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியே எமது தலையாய குறிக்கோள்
உதவுவோம்! பண்படுத்துவோம்! பாராட்டுவோம்!
பட்டம் பெற்றுத் தொழிலிற் சிறப்போம்!

# அருவியூர் நகரத்தார் குரல்

ஆண்டு 26
குரல் 162

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து - குறள் 398

நவம்பர்-2022
சுபகிருது-
ஐப்பசி-கார்த்திகை

**கழக நிர்வாகிகள்**
**தலைவர்**
செ. ஆசை அலங்காரம் - 96294 67287
**செயலாளர்**
மு. இராமலிங்கம் - 9943 01 7232
**பொருளாளர்**
சு. முத்து - 90430 10199

**நிர்வாகக் குழு**
**இணைத் தலைவர்கள்**
ஏ.பி. ஸேதுராமன் - 98422 89705
சொ. இராமனாதன் - 97155 100 0179
**துணைத் தலைவர்**
Ln. க. இளங்கோவன் - 94420 41340
**உறுப்பினர்கள்**
சொ. இளங்கோவன் - 94434 54173
ச. பழனியப்பன் - 90257 87637
சே. தவசீலன் - 98439 91517
ரா. வினோத்குமார் - 90038 00417

**உள் தணிக்கையாளர் :** R. வினோத்குமார்
**Website Manager : S.S. Manian,** DCE., Pudukkottai
**website : www.avnsangams.co.in**

**குரல் ஆண்டு சந்தா : ரூ.120/-**
**குரல் ஆயுள் சந்தா : ரூ.1800/-**

**குரல் நிறுவிய ஆசிரியர்**
திரு.சொ. வைத்திலிங்கம்
தொடக்கம் : 1997
**கௌரவ ஆசிரியர்**
திரு. M.S. முருகப்பன்
தலைவர் அ.வ.ந. பொதுநலச்சங்கம்

**குரல் பதிப்பாசிரியர்**
திரு செ. ஆசை அலங்காரம்
**ஆசிரியர் குழு**
திரு செ. ஆசை அலங்காரம்
Dr. சூரியகலா குமார்
V. கணேசன்
மற்றும் கழக நிர்வாகிகள்

கடிதம், செய்திகள், படைப்புகள் இவற்றை
அனுப்ப வேண்டிய முகவரி :
அருவியூர் நகரத்தார் குரல்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்,
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளெக்ஸ் பின்புறம்,
பொன்னமராவதி,
புதுக்கோட்டை - 622 407.
avnkalvi@gmail.com
அலுவலக வாட்ஸ்அப் : 87783 55837

## ✶✶✶ முப்பெரும் விழா அழைப்பிதழ் ✶✶✶

வரும் 25-12-2022-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிரான்மலை மங்கைநாயகர் மன்றத்தில் அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத்தின் **41-வது ஆண்டுவிழா,** நன்கொடையாளர்களுக்கு நன்றி பாராட்டு விழா 2021-2022 கல்வி ஆண்டு 10, 12 மற்றும் பட்டப்படிப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிந்த மாணவச் செல்வங்களுக்கும், கல்வி தவிர பிற துறைகளில் சாதனைகள் நிகழ்த்திய மாணவச் செல்வங்களுக்கும் பாராட்டு, **பரிசளிப்பு விழா,** நகரத்தார் குரலுக்கு நல்ல படைப்புகளை வழங்கி வரும் படைப்பாளிகள் சிறந்த வாசகர்கள் அனைவருக்கும் **பாராட்டு விழா** போன்ற விழாக்கள் நடைபெற உள்ளது. அனைத்து மாணவச் செல்வங்களும், நகரத்தார்கள் அனைவரும் இவ்விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. **–கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் சிந்தனை | 3 |
| 2. | கல்வி வளர்ச்சிக் கழக அறிவிப்புகள் | 6 |
| 3. | குரல் விளம்பரக் கட்டணம் | 8 |
| 4. | கல்வி வளர்ச்சிக் கழக செயற்குழு கூட்ட நிகழ்வுகள் | 9 |
| 5. | சாதனையாளரின் சரித்திரம் | 11 |
| 6. | படித்ததில் பிடித்தது | 16 |
| 7. | 44-வது செஸ் ஒலிம்பியாட் தீபம் தொடர் ஓட்டத்தில் நம்மவர் | 20 |
| 8. | திருமணச் செய்தி | 21 |
| 9. | புதிய கல்விக்காவலர்கள் | 22 |
| 10. | தன்னம்பிக்கை கதை | 23 |
| 11. | ஆலவயல் சங்கத்தின் 11-வது ஆண்டு விழா | 24 |
| 12. | கம்ப இராமாயணம் தொடர் வாசிப்பு நிகழ்ச்சி | 25 |
| 13. | பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தின் 50-ஆம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் | 26 |
| 14. | பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தின் 50-ஆம் ஆண்டு பொன்விழா | 29 |
| 15. | பகவத் கீதை ஆராய்ச்சி போட்டியில் வெற்றிவாகை சூடிய நம்மவர் | 31 |
| 16. | சிவபாதம் சேர்ந்தார் | 37 |
| 17. | பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள் | 41 |
| 18. | நம்மவரில் மேலும் ஒரு பெண் மருத்துவர் | 43 |
| 19. | கல்விக்காவலர்கள் | 44 |
| 20. | நல்வாழ்வு வாழ யோகா | 47 |
| 21. | சொந்த ஊர் சொர்க்கமே | 49 |
| 22. | இறைவன் துணை உனக்குண்டு | 50 |
| 23. | சிந்தனைக் களம் | 51 |
| 24. | திருமந்திரம் | 54 |
| 25. | வாசகர் குரல் | 55 |
| 26. | இறைவன் நமக்கு வேண்டும் | 58 |
| 27. | கேள்விக்கென்ன பதில் | 62 |
| 28. | ஒருவர் தினசரி செய்யவேண்டிய பழக்கங்கள் | 64 |

தலைவர் சிந்தனை

**வணிகம் செய்வோம்!**

**வளம் பெறுவோம்!**

**செ. ஆசை அலங்காரம்** B.Sc.,

தலைவர்

**மக்கள் சேவையே! மகேசன் சேவை!**



பெருமைக்குரிய நகரத்தார் பெருமக்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் அன்பான வணக்கம்!

தீபாவளித் திருநாளை மகிழ்வோடு கொண்டாடி, இன்புற்று மகிழ்ந்திருக்கும் இந்த நல்ல வேளையில் இக்கடிதத்தின் மூலம் எனது எண்ணங்களையும், மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வதின் மூலம் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

02-10-2022 அன்று பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தின் 50-ம் ஆண்டு விழா (பொன்விழா) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இது ஒரு பொன்னான நாள். கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தமொன்று நடத்தி நம் தேசத்திற்கு விடுதலை பெற்றுத்தந்த தேசப்பிதா மகாத்மா காந்தி பிறந்த நாள். உயரமில்லா குள்ளமான மனிதர். ஆனால் நேர்மை, ஒழுக்கம், எளிமை, சுயநலமின்மை போன்ற உயர்ந்த பண்புகளை தன் ஆயுட்காலம் முழுவதும் கடைபிடித்து வாழ்ந்த மாமனிதர் லால்பகதூர் சாஸ்திரியின் பிறந்த நாள். கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜரின் நினைவு நாள். உலகம் போற்றும் இம்மூன்று மாபெரும் தலைவர்களின் நினைவுகளைப் போற்றும் இந்த நாளை பொன்விழா கொண்டாட்டத்திற்கு தேர்வு செய்த பொன்னமராவதி அ.வ.ந. சங்கத் தலைவர் மற்றும் நிர்வாகிகளின் உயர்ந்த எண்ணத்தை நினைத்து வியந்து பாராட்டுகிறேன்.

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகியவற்றை அன்றைய தினத்தில், அதே மண்டபத்தில் நடத்த நேரம் ஒதுக்கித் தர பொன்னமராவதி அ.வ.ந. சங்கத் தலைவர் திரு M. இராமசாமி அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். நிர்வாகிகளிடம் கலந்து பேசி முடிவு சொல்கிறேன் என பதில் அளித்தார். தனது நிர்வாகிகளுடன் கலந்து பேசி, அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகக் கூட்டம் நடத்த ஒப்புதல் பெற்றுத் தந்ததோடு, கூட்டம் நடத்த நேரத்தையும், மண்டப மாடியையும் ஒதுக்கிக் கொடுத்த அவரின் பெருந் தன்மையைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் நிர்வாகிகளுக்கும், செயற்குழு உறுப்பினர் களுக்கும் மதியம் அறுசுவை உணவும், கூட்டம் நடந்த இடத்திலேயே மாலை சிற்றுண்டியும், காபியும் வழங்கி உபசரித்த சங்க நிர்வாகிகளின் விருந்தோம்பல் பண்பு மிகுந்த பாராட்டுக்குரியதாகும்.

பொன்விழா கதாநாயகன் பொன்மனச் செம்மல் அரிமா திரு M. இராமசாமி அவர்களுக்கும், செயல்திறன் மிக்க செயலாளர் திரு M. சரவணன் அவர்களுக்கும், ஏற்றுக்கொண்ட பதவிகளுக்கெல்லாம் பெருமையைத் தேடித் தரும் பொருளாளர் திரு சொ. செந்தில்குரு அவர்களுக்கும் மற்றும் எங்கள் கூட்டம் நடத்த உதவியாக இருந்த சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அ.வ..ந. கல்வி வளர்ச்சிக் கழக செயற்குழுக் கூட்டம் நடத்த அனைவருக்கும் வசதியான நாளாக இந்த நாளை தேர்வு செய்ய நல்ல ஆலோசனை வழங்கிய பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இளைஞர் பேரவையின் 40-வது ஆண்டு விழாவும், மாதர் சங்கத்தின் 30-வது ஆண்டு விழாவும், பொன்விழாவை மெருகு ஊட்டக்கூடிய வகையில் அமைந்திருந்தது மேலும் சிறப்பாகும். பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

வரும் 25-12-2022-ம் தேதி கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டுவிழா, நமது கல்வி வளர்ச்சிக் கழகத்தின் உயிர்நாடியான கல்விக்காவலர்கள், வள்ளல் பெருமக்களுக்கும் நன்றி பாராட்டு விழா 10, 12 மற்றும் பட்டப்படிப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிந்த மாணவச் செல்வங்களுக்குப் பாராட்டு, பரிசளிப்பு விழா, கல்வி தவிர பிற துறைகளில் சாதனைகள் நிகழ்த்திய மாணவச் செல்வங்களுக்கு பாராட்டு, பரிசளிப்பு விழா, நகரத்தார் குரலுக்கு நல்ல படைப்புகளை வழங்கி வரும் படைப்பாளிகள் சிறந்த வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டு விழா போன்ற விழாக்கள், மாணவச் செல்வங்களை ஊக்கப்படுத்தும் வகையிலும், அனைவரும் மகிழும் வண்ணமும் சிறப்பாக நடைபெற உள்ளது.

பரிசும் பாராட்டும் வழங்க நாங்கள் தயார்...

பரிசுகளை அள்ளிச் செல்ல நீங்கள் தயாரா?





என மாணவ மாணவிகளின் சிந்தனையைத் தூண்டும் வகையில் வினா எழுப்புகிறேன். ஏனெனில் பல மாணவர்கள் மேற்கண்ட பாராட்டும், பரிசளிப்பு விழா முடிந்த பின் மதிப்பெண் பட்டியலை (Mark Sheet) அனுப்பிய சம்பவங்கள் பல கடந்த காலத்தில் நடந்துள்ளன. இவ்வாறு மதிப்பெண்கள் பட்டியலை காலம் கடந்து சமர்ப்பிக்கப்பட்டதால் தகுதியிருந்தும் பாராட்டையும், பரிசையும் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளன. இது மிகவும் வேதனைக்குரியதாகும். இது போன்ற நிகழ்வுகள் நடக்காமல் தவிர்க்க வேண்டுமெனில் 10, 12, பட்டப்படிப்பு பொறியியல், மருத்துவ மற்றும் பிறதுறை மாணவர்கள் தங்களின் மதிப்பெண் பட்டியலை (xerox copy of original Mark Sheet) வரும் 20.11.2022-ம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பரிசளிப்பு, பாராட்டு விழா ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 25-ம் தேதி என்பது பல ஆண்டுகளுக்கு முன்பு முடிவு செய்யப்பட்டு, அதன்படி விழாக்களும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே மாணவர்கள் மற்றும் பிற துறை சாதனையாளர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தங்களின் மதிப்பெண் பட்டியல் மற்றும் சாதனை விபரங்களை அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். 2021-22-ம் கல்வியாண்டில் பயின்று 80% க்கு மேல் மதிப்பெண் பெற்று அனைத்து பருவத் தேர்வுகளிலும் நிலுவை எதுவும் இல்லாமல் பட்டம் பெற்றவர்கள் ( Arts, Science, Engineering & Medicine) உரிய சான்றிதழ் நகல்களை பாராட்டும், பரிசும் பெற விண்ணப்பிக்கவில்லை. இவர்கள் காலக்கெடுவுக்குள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்

மேற்கண்ட குறள்களின் வழியில் தங்களின் பிள்ளைகளோடு பெற்றோர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு வள்ளுவர் பெற்ற இன்பத்தை பெற்று மகிழ வேண்டுகிறேன். தவறாது வருகை தாருங்கள். மகிழ்ச்சி என்னும் ஆனந்தக் கடலில் நீந்துவோம். உங்கள் வருகையை எதிர்நோக்கி காத்திருக்கிறேன்.

# கல்வி வளர்ச்சிக் கழக அறிவிப்புகள்

மு. இராமலிங்கம், செயலாளர், அலுவலகம் - 87783 55837.



1. தொடர்புக்கு : வாட்ஸ் அப் எண். 9943017232

   மு. இராமலிங்கம், செயலாளர்.

   அலுவலக வாட்ஸ்அப் எண். 87783 55837.

| வரிசை எண். | கடன் பெற்றவர் பெயர் | ஊர் | பெற்ற கடன் தொகை | கடன் முழுவதும் செலுத்திய தொகை |
|---|---|---|---|---|
| 1. | செ. ஆசை அலங்காரம் | கோவை | 30,000 | 30,000 |
| 2. | ப. சந்தோஷ்குமார் | திண்டுக்கல் | 40,000 | 40,000 |
| 3. | ரா. பத்மபிரியா | திண்டுக்கல் | 30,000 | 30,000 |
| 4. | மு. சௌந்தர்யா | தஞ்சாவூர் | 20,000 | 20,000 |
| 5. | ர. நாகவர்ஷினி | சென்னை | 10,000 | 10,000 |
| 6. | ச. மணிவாசகம் | தஞ்சாவூர் | 10,000 | 10,000 |
| 7. | ரா. ஹரிஸ் | தஞ்சாவூர் | 30,000 | 30,000 |
| 8. | சே. கார்த்திக் | சிங்கம்புணரி | 20,000 | 20,000 |
| 9. | B. சுந்தர் | சோமனூர் | 20,000 | 20,000 |
| 10. | க. அருண்நந்தகுமார் | திண்டுக்கல் | 10,000 | 10,000 |
| 11. | வி. தீபக் | கொட்டாம்பட்டி | 26,000 | 26,000 |
| 12. | ப. முத்தமிழ்செல்வன் | கோவை | 30,000 | 30,000 |
| 13. | ப. மணிகண்டன் | ஆலவயல் | 30,000 | 30,000 |
| 14. | தெ. பிரவீன் | பொன்னமராவதி (வி.புதூர்) | 40,000 | 40,000 |

2020-2021 வரை கல்வி வளர்ச்சிக் கழகம் மூலம் 52 மாணவர்களுக்கு பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில் மேற்கண்ட 14 மாணவர்கள் தங்களின் படிப்பு முடிந்து பெற்ற கடன்தொகை முழுவதும் செலுத்தி தாய் தந்தையருக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இதுபோல் மற்ற 38 மாணவர்கள் தாங்கள் பெற்ற கடனை சிறிது சிறிதாக செலுத்தி கடன் முழுவதையும் தீர்க்குமாறும் பிற படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி செய்யுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.





பணம் செலுத்தியவுடன் தகவல் தெரிவிக்க வேண்டிய வாட்ஸ்அப் எண்.99430 17232, மு. இராமலிங்கம், செயலாளர்.

**வங்கி கணக்கு விபரம்**

| | | |
|---|---|---|
| கணக்கின் பெயர் | : | அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகம் (AVN KALVI VALARCHI KAZHAGAM) |
| வங்கி/கிளையின் பெயர் | : | இந்தியன் பேங்க், புதுப்பட்டி |
| கணக்கு எண் | : | 493740102 |
| IFSC | : | IDIB000P052 |

கல்வி வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் ஊக்கப்பரிசு, பதக்கங்கள், புத்தகப் பரிசு பெற 10, 12, வகுப்பு CBSE 10, 12, மதிப்பெண் சான்றிதழ் நகல்களை அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அனுப்பி வைக்கும்போது கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட் அல்லது தற்காலிக சான்றிதழ்களை அனுப்ப வேண்டாம். இவைகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

மேற்கண்ட மதிப்பெண் பட்டியலை ஜெரக்ஸ் நகல் எடுத்து அதன் பின்புறம், பெற்றோர் பெயர், முகவரி (பின்கோடுடன்) செல் நம்பர், இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, குடிப்பட்டம்-பூர்வீகம் ஆகிய விபரங்களைத் தெளிவாக எழுதி கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

M.B.B.S., B.E. இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகளில் பருவத் தேர்வுகளில் எவ்வித arrear இன்றி 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் தங்கள் சான்றிதழ் நகல்களை அனுப்பி வைக்கவும்.

**மேற்குறிப்பிட்டுள்ளபடி நகல் சான்றிதழ்களை 20.11.2022-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்கின்றோம். இதற்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. 2022ஆம் ஆண்டில் இளம் சாதனையாளர் / பிற துறைகளில் சாதனை புரிந்தவர்கள் மற்றும் சாதனை செய்த மாணவச் செல்வங்கள் தங்கள் புகைப்படத்துடன் 26.11.2022க்குள் எழுதி அனுப்பவும்.**

**- செயலாளர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம், பொன்னமராவதி.**

# குரல் விளம்பரக் கட்டணம் 2023

2023-ஆம் ஆண்டிற்கு ஆறு இதழ்களில் நமது சமூகத்தவர்கள், வியாபாரிகள் மற்றும் நற்சிந்தனையாளர்கள் அரைப்பக்கம் / முழுப்பக்கம் விளம்பரங்கள் கொடுத்து குரல் வளர்ச்சிக்கு உதவிட வேண்டுகிறோம்.

**குரல் ஆறு இதழ்கள் கட்டணம் :**

1. கருப்பு வெள்ளை ஒரு பக்கம் : ரூ.3200/-
2. கருப்பு வெள்ளை அரைப் பக்கம் : ரூ.1600/-
3. கலர் முழுப்பக்கம்/ பின் அட்டை முக்கால் பக்கம்: ரூ.8500/-

**குரல் தனிச் செய்தி கட்டணம் (ஒரு இதழ் மட்டும்)**

1. முன் அட்டை கலர் : ரூ.5000/-
2. உள் பக்கம் கலர் : ரூ.2500/-
3. கருப்பு வெள்ளை ஒரு பக்கம் : ரூ.1200/-
4. கருப்பு வெள்ளை அரைப் பக்கம் : ரூ.600/-

புதிதாக விளம்பரம் கொடுப்பவர்கள் தனித்தாளில் தங்களுக்குத் தேவையான விபரங்களை எழுதி தகவல் தெரிவிக்கவும்

**விளம்பரக் கட்டணத்தை வங்கி மூலம் அனுப்ப கணக்கு விபரம்:**

கணக்கு பெயர் : AVN கல்வி வளர்ச்சிக் கழகம்
வங்கியின் பெயர் : இந்தியன் வங்கி, புதுப்பட்டி கிளை
சேமிப்பு கணக்கு எண் : 574835323
IFSC Code : IDIB000P052

பணம் கட்டிய ரசீதின் ஜெரக்ஸ் நகலை (Counter Foil) வாட்ஸ்அப் மூலம் அனுப்பி வைக்கவும். வாட்ஸ்அப் எண். 9943 017232 மு. இராமலிங்கம், செயலாளர்.

**குரலுக்கு கடிதம் எழுதுவோர் கவனத்திற்கு :**

நகரத்தார் குரலுக்கு கதை, கட்டுரை, நிகழ்ச்சிகள் மற்றும் கருத்துக்கள் எழுதுவோர் தங்களது முழுப் பெயர், முகவரி, செல் நம்பர் இவற்றை குறிப்பிடவும்.

– குரல் நிர்வாகம்





# அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழக செயற்குழு கூட்ட நிகழ்வுகள்

02-10-2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக்கழக செயற்குழுக் கூட்டம் பொன்னமராவதி மங்கை நாயகர் மன்றத்தில் கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு செ. ஆசை அலங்காரம் அவர்கள் தலைமையிலும், அனைத்து ஊர் சங்க உறுப்பினர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. கல்வி வளர்ச்சிக்கழக ஆண்டுவிழா, மாணவ மாணவி களுக்கான பாராட்டு பரிசளிப்பு விழா மற்றும் நன்கொடையாளர்களுக்கு பாராட்டு விழா 25-12-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று பிரான்மலை மங்கைநாயகர் மன்றத்தில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.
2. I.T.I. படிக்கும் வறுமையில் உள்ள மாணவர் நா. முருகானந்தம் என்பாருக்கு (கோவை) இலவச உதவித் தொகை ரூ. 3000/- வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
3. சிறுகுடியைச் சேர்ந்த 11-ம் வகுப்பு படிக்கும் மாணவி மு. மீனாட்சி என்பாரின் கோரிக்கையின்படி தனது குடும்ப வறுமை சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு கல்வி வளர்ச்சிக் கழகத்திலிருந்து ரூ.3000/- கல்வி செலவினங்களுக்காக 2022-2023 மட்டும் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
4. கல்லூரியில் பயிலும் **பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள** மாணவர்களுக்கு இலவச உதவித்தொகையை உயர்த்தி ஆண்டுதோறும் ரூ.10,000/- வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
5. கல்விக்கடன் பெற்ற சிறுகுடியைச் சேர்ந்த T. ஜெயா இயற்கை எய்திவிட்டதால் அவர் பெற்ற கடன்தொகை ரூ. 20,000/- ஐ





மீளப் பெற இயலாததால் மேற்கண்ட தொகை ரூ. 20,000/- ஐயும் மனித நேயத்துடன் தள்ளுபடி செய்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

6. கல்விக்கடன் பெற்ற திருமதி J. பத்மாவதி B.Sc. அவர்களின் தாய் தந்தை இருவரும் இறந்துவிட்டதால் அன்னாருக்கு வழங்கப்பட்ட கடன்தொகை ரூ.30,000/- ஐ மீளப் பெற இயலாத காரணத்தால் மேற்படி தொகை ரூ.30,000/- ஐயும் மனிதநேயத்துடன் தள்ளுபடி செய்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

7. 2022-ஆம் ஆண்டில் இணைந்த 41, 42 மற்றும் 43-வது கல்விக் காவலர்களுக்கும், மாபெரும் கொடை வள்ளல்களுக்கும் ஆண்டுவிழாவின் போது மரியாதை செய்வது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்


உ

சிவமயம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்துமமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே

திருஞான சம்பந்தர் அருளிய
திருக்கொடுங்குன்ற பதிகம்

குரல் சிறக்க வாழ்த்துக்கள்

**அன்புமணி மெடிக்கல்**

**சின்னக்கடை வீதி, 260, அண்ணாசாலை,**

**பொன்.புதுப்பட்டி, பொன்னமராவதி.**

**போன் : 04333 260285, செல் : 94423 58165**

அட்டைப்பட விளக்கம்

# சாதனையாளரின் சரித்திரம்



இந்த இதழின் அட்டைப் படத்தை அலங்கரிப்பவர் தெய்வத்திரு நா. ஜெயராமன் செட்டியார் அவர்கள். இவர் கல்லம்பட்டியைப் பூர்வீகமாகக் கொண்ட திரு M.C.K. நாராயணன் செட்டியார் அவர்களின் மூன்றாவது மகன். இவரது தாயார் உலகம்பட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ராஜமாணிக்கம் ஆச்சி. இவர் ஜெய வருடம், புரட்டாசி மாதம் சனிக்கிழமை அன்று வீட்டில் தொடர் இராமாயணம் படித்துக் கொண்டிருந்த போது பிறந்தார். அதனாலேயே இவருக்கு ஜெயராமன் என்று பெயரிட்டனர். 18.09.1954-ல் இவர் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் சிவயோகம் என்கின்ற அக்காவும், அருள்பிரகாசம், சுப்பிரமணியன் என்கின்ற இரு அண்ணன்களும் ஆவார்கள்.

கழனிவாசலூருடையார் என்ற குடிப்பட்டத்தைக் கொண்ட இவரது தந்தையார், அப்பெயருக்கேற்ப நிலபுலன்களுடன் பெரும் நிலச்சுவான்தாரராகவே இருந்தார். ஆயினும் கல்வியின் பெருமையை நன்கு உணர்ந்த அவர், தன் புதல்வர்களின் கல்விக்காக கும்பகோணத்திற்கு குடிபெயர்ந்தார். தந்தையின் விருப்பத்திற்கேற்ப புதல்வர்களும் நன்கு கல்வி கற்றனர். திரு நா. ஜெயராமன் அவர்கள் பி.காம். மற்றும் A.C.A. படித்து கணக்காளராக உயர்ந்தார். தொடக்கத்தில் "Malladi Drugs and Pharmachuticals' என்ற நிறுவனத்தில் சிறிது காலம் பணிபுரிந்தார். அதன்பின் தமிழக அரசு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றினார். பின்பு CPCL என்ற மத்திய அரசு பெட்ரோலிய நிறுவனத்தில், பைனான்ஸ் டிபார்ட்மெண்டில் தலைமை அதிகாரியாக (**Chief Manager, Finance**) 30 ஆண்டுகள் திறம்படப் பணிபுரிந்து 2014-இல் ஓய்வு பெற்றார். அந்நிறுவனத்தின் லோகோவை (LOGO) வடிவமைத்தது இவரே என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

திரு நா. ஜெயராமன் அவர்கள் ஒழுக்கம், நேரந்தவறாமை ஆகிய இரு பண்புகளையும் இருகண்களாகப் பேணிப் பாதுகாத்தார். பிறரிடமும் அதை எதிர்பார்த்தார். அதனாலேயே அவர் இருக்கும் இடத்தில் பிறரும் அவற்றைத் தன்னிச்சையாகப் பின்பற்றத் தொடங்கி விடுவர். இவர் செய்யும் செயல்கள் அனைத்திலும் சிறந்த திட்டமிடல் பரிணமிக்கும்.

பிறருக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி கொள்வார். “வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது” என்பார்கள். அது இந்த அட்டைப்பட நாயகருக்கு மிகப் பொருத்தமாகும்! ஆம்! சிலருக்குப் பண உதவி செய்தும், சிலருக்கு கல்வி, வேலை வாய்ப்பு போன்றவைகளுக்கு வழிகாட்டியாகவும், பொருளாதார நிர்வாகத்தில் தக்க ஆலோசனை வழங்கியும் பலதரப்பட்ட உதவிகள் செய்துள்ளார்.

**திரு நா. ஜெயராமன் அவர்கள் ஆற்றிய சமுதாயப் பணிகள்:**

* 1988 ஆம் ஆண்டு சென்னையில் நம் இனத்தவருக்கு ஒரு சங்கம் வேண்டும் என விரும்பி முயற்சிகள் மேற்கொண்டார்.
* 1991 ஆம் ஆண்டு சென்னை சங்கம் தோன்றக் காரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர்.
* சென்னையில் குடியிருக்கும் நம் இனத்தவர்களின் முகவரிகளை சேகரித்து முதன்முதலாக ஒரு புத்தகம் வெளியிட்டார்.
* அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தணிக்கையாளராகப் பணிபுரிந்தார்.
* நவம்பர் 2007-ல் தனது பெற்றோரைக் கல்விக் காவலர்களாக ஆக்கி பெருமை சேர்த்தார். கல்விப் புரவலராகவும் திகழ்ந்தார்.
* "avnkalvi.blogspot.com" என்ற வெப்சைட்டை ஆரம்பித்து அதன் மேலாளர் ஆகவும் விளங்கினார்.
* சென்னை அண்ணாநகரில் தான் குடியிருக்கும் ‘சிநேகம் அபார்ட்மெண்ட்ஸ்’ என்ற அடுக்குமாடி குடியிருப்பில்

வசிப்பவர்களுக்காக ஒரு சங்கம் அமைத்தார். அதன் முதல் **தலைவர் (President)** இவரே.

வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட திரு நா. ஜெயராமன் அவர்கள் பேராசிரியராக உயர்ந்தார். யோகமும், மனித மாண்பும் (Yoga for human Excellence) என்ற முதுகலைப் பட்டப் படிப்பை ஆங்கிலத்தில் ஒரு முறையும். தமிழில் ஒரு முறையும் படித்து இருமுறை எம்.ஏ. பட்டம் பெற்றவர். சென்னை அண்ணாநகர் மனவளக்கலை மன்றத்தின் (Managing Trustee) நிர்வாக அறங்காவலர் ஆகப் பணிபுரிந்தார். 35 ஆண்டுகளாக வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்த இம்மன்றத்திற்கு நிதி திரட்டி சொந்தமாக ஒரு இடம் வாங்கித் தொடங்கி வைத்தார். இது அவரது பலநாள் கனவாகும். இதனை தன் மறைவிற்கு 10 நாட்கள் முன்பு நிறைவேற்றியது வியத்தகு நிகழ்வாகும்.

திரு நா. ஜெயராமன் அவர்களின் மனைவி திருமதி தேன்மொழி அவர்கள். இவர் அம்மன்குறிச்சி குருஜி A.M. ஷண்முகம் செட்டியார் அவர்களின் இரண்டாவது மகள். இவரும் BSNL என்ற மத்திய அரசு நிறுவனத்தில் 30 ஆண்டுகள் திறம்படப் பணிபுரிந்து, துணைப் பொதுமேலாளராக (Deputy General Manager) 2019 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றவர். திரு நா. ஜெயராமன் அவர்கள் தன் அத்தை மகளையே மணமுடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு ராகுல் கண்ணா என்ற மகனும், கீர்த்தனா என்ற மகளும் உள்ளனர். மகன் ராகுல் கண்ணாவுக்கு காரைக்குடி திரு R. இளங்கோ செட்டியார் – திலகம் ஆச்சி ஆகியோரின் மகள் நாகேஸ்வரி என்ற சுகன்யாவைத் திருமணம் செய்துள்ளனர். இத்தம்பதிக்கு ஆராத்யா என்ற மகளும், அபிநவ் என்ற மகனும் உள்ளனர். இவர்கள் அமெரிக்காவில் சான்ஜோஸ் (SANJOSE) என்ற நகரில் இனிதே வாழ்ந்து வருகின்றனர். மகள் கீர்த்தனாவைப் புழுதிபட்டி திரு M. தங்கராஜன் செட்டியார் – அழகு மீனாள் ஆச்சி ஆகியோரின்

மகன் விமல்ராஜன் அவர்களுக்கு மணமுடித்துள்ளனர். இவர்கள் பெங்களூரில் இனிதே வாழ்ந்து வருகின்றனர்.

தன் குடும்பம் காத்து, உற்றாரைப் பேணி, நட்புக்குக் கைகொடுத்து, சமுதாய நலனுக்கும் உழைத்த திரு நா. ஜெயராமன் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

உண்மை, உழைப்பு, ஒழுக்கம், நேர்மை இவை அனைத்திற்கும் உதாரணமாகத் திகழ்ந்த திரு நா. ஜெயராமன் அவர்களின் வாழ்க்கை ஒரு வரலாறு ஆகும். உன்னத வாழ்வு வாழ்ந்த உத்தமரான இவர் 09.06.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரது ஆன்மா அமைதி பெற்று ஆண்டவனின் நிழலில் இளைப்பாற வேண்டுகிறோம்.

**நீங்கா நினைவில்... என்றும் அவர்காட்டிய வழியில்...**

| | | |
|---|---|---|
| மனைவி | : | தேன்மொழி ஜெயராமன் B.Sc., M.A. |
| மகன் | : | N.J. ராகுல் கண்ணா B.E., M.S. |
| மருமகள் | : | E. நாகேஸ்வரி என்ற சுகன்யா B.E., M.S. |
| மகள் | : | N.J.கீர்த்தனா B. Arch., M. Des. |
| மருமகன் | : | T. விமல்ராஜன் B.E., M.E. |

நாமும் திரு நா. ஜெயராமன் அவர்களின் நற்பண்புகளைப் பின்பற்றி முன்னேறுவோம்.

**மனிதநேய பண்பு வளர நம் சமுதாயம் அவர் வழியில் நடந்து காட்டுவது தான் நாம் அவர் மீது செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.**

**– தலைவர் கல்வி வளர்ச்சிக் கழகம்**

# கவிதாஞ்சலி

அயராத உழைப்புக்கு அகராதி பார்த்தால்
ஜெயராமன் என்கின்ற இவர் பெயரே காட்டும்!
நயமான வார்த்தைகள் நலமாய் உரைத்திடுவார்!
சுயமாக சிந்தித்து சுறுசுறுப்பாய் செயல்படுவார்!
ஓயாத தேனீயைப் போலச் சுழன்றிடுவார்!
தூய வாழ்க்கைக்கு வழியும் கூறிடுவார்!
மாயப் பிறப்பறுக்க மகரிஷி வழிசென்றார்!
தாயும் பேணினார்; தந்தையும் பேணினார்!
சேயும் காத்துத் தக்கதுணை தேடித்தந்தார்!
பாயும் நதிபோலப் பலபேர்க்கு நன்மை செய்தார்!
காயும் கனியாகும் கரங்கள் பட்டாலே!
உயர்ந்த பண்பினால் உயர்ந்தவர் பற்பலர்!
வியந்து பாராட்டி உவக்கின்றார் நகரத்தார்!
ஐயன் சாம்பிராணி வாசகர் அருளாலே
லயமொடு சுருதியாய்த் தேன்மொழியாளுடனே
இயலொடு இசையென இசைந்து வாழ்ந்தாரே!
பயணம் முடித்து வியனுலகு ஏகினார்!
அயனங்கள் பலகடந்தும் அவர்புகழ் நிற்குமே!

**– மு.ச. மீனாட்சி பாரதி, சென்னை**

---



## ஆரோக்கிய நிவாரணி சீரகம்

- சீரகத்தை நன்கு வறுத்து தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து அருந்தி வந்தால் வறட்டு இருமல் குறையும்.
- சீரகத்தை வாயில் போட்டு குளிர்ந்த நீர் பருகினால் தலை சுற்றல், மயக்கம் குறையும்.
- அதிகமாக பேதி ஏற்பட்டால் சீரகம், ஓமம் இரண்டையும் கலந்து கசாயம் செய்து சாப்பிட பேதி கட்டுப்படும்.
- பசியின்மை, குமட்டலுக்கு சீரகத்தை எலுமிச்சை சாறில் ஊறவிட்டு பின் காயவைத்து சாப்பிட சரியாகும்.
- சீரகத்தை நன்கு வறுத்துப் பொடியாக்கி, கருப்பட்டியுடன் கலந்து சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி சரியாகும்.
- தண்ணீரில் சிறிது சீரகத்தைப் போட்டு கொதிக்க வைத்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர செரிமானக் கோளாறு, வயிற்று வலி தீரும்.

–ஆசிரியர் குழு






# படித்ததில் பிடித்தது - 1

சொ. வைத்திலிங்கம், மதுரை





ஒரு சிறு முன்னுரை

பாலம் கல்யாணசுந்தரம் ஐயா பற்றி நிறையப் பேருக்குத் தெரியவில்லை. அவரைப் பற்றிய விவரம் தெரிந்து கொண்டால் அது, உங்களுக்கு இப்படியும் ஒரு மனிதரா? என்ற மிகப் பெரிய ஆச்சரியத்தைத் தரும். ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த மனிதர் (Man of Millenium) என்ற விருதுக்கு அமெரிக்காவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, 30 கோடி பரிசு பெற்று, அதைக் குழந்தைகள் நலனுக்கு அளித்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் இவருக்கு "A Notable intellectual in the world" என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. இன்னும் பல வியப்பூட்டும் செய்திகளை அறிய வேண்டுமா? கட்டுரையைப் படியுங்கள்.

பில் கிளிண்டன் (அமெரிக்கா ஜனாதிபதி) இந்தியா வந்த போது அரசு சாரா இருவரை சந்திக்க விரும்பினார். ஒருவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம். இன்னொருவர் பாலம் கல்யாண சுந்தரம் ஐயா.

35 ஆண்டுகள் பேராசிரியர் பதவியில் பணிபுரிந்து பெற்ற சம்பளம் அனைத்தையும் ஏழை மக்களின் நலனுக்காக செலவிட்டு, தமது சொந்தச் செலவிற்கு ஒரு உணவகத்தில் சர்வராக வேலை பார்த்தவர். இவ்வாறு 35 ஆண்டுகளாகத் தான் பெற்ற ஊதியம் 30,00,000/- (ரூபாய் முப்பது லட்சத்தையும்) முழுமையாகக் கொடுத்து வரலாறு படைத்தார் பாலம் கல்யாண சுந்தரம் ஐயா.

உலகில் எந்த நாட்டைச் சேர்ந்த மத்திய, மாநில அரசு ஊழியர்களோ, தனியார் நிறுவனத்தில் வேலை செய்பவர்களோ இவ்வாறு செய்ததில்லை என்பதால் அமெரிக்காவில் ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த மனிதர் (Man of Millenium) என்ற விருதுக்கு தேர்ந்தெடுக்கபட்டு 6.5 மில்லியன் டாலர் (30 கோடி) பரிசாகப்

பெற்றார். அதையும் குழந்தைகள் நலனுக்காக அளித்து, உலகில் கோடிக்கணக்கானவர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

தன் பங்கிற்குக் குடும்பத்தில் கிடைத்த ரூ.50 லட்சம் மதிப்புடைய சொத்தில் தனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளாமல் மக்களுக்கு அளித்து, தனக்குப்போக தானம் என்பதை மாற்றிக் காட்டினார் பாலம் ஐயா.

சூப்பர் ஸ்டார் திரு ரஜினிகாந்த் பாலம் ஐயாவை தனது தந்தையாக தத்தெடுத்துக் கொண்டார். ஓரிரு மாதத்தில் தனது பழைய வசிப்பிடத்துக்கே சூப்பர் ஸ்டாருக்கு நன்றி கூறிவிட்டு திரும்பினார். ஐயா அவர்கள் தன் பெயருக்குப் பின்னால் M.A.(litt)., M.S.(His).,M.A.(GT)., B.Lip.Sc., DCT, DRT, DMTI, FNCW, DS என 36 எழுத்துக்குச் சொந்தக்காரரான இவர் அனைத்திலும் பல்கலைக்கழகத்தில் முதலிடம் பெற்றார்.

ஏழைகளின் துயரினை நேரிடையாக அறிந்துகொள்ள 7 ஆண்டுகள் நடைபாதை வாசியாகவே வாழ்ந்தார். 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே தன் உடல் உறுப்புகளை மருத்துவக் கல்லூரிகளுக்கு தானமாக எழுதி வைத்து விட்டார். வாழ்நாள் முழுவதும் ஒரு செண்டு நிலம், ஒரு ஓலைக் குடிசை, ஒரு சல்லிக்காசு இல்லாமல் அனைத்தையும் நாட்டு மக்களுக்காக அர்ப்பணிக்க, திருமண வாழ்வையும் தியாகம் செய்தவர்.

லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் A Most Notable intellectual in the World என்ற பட்டத்தை வழங்கியதுடன் நூலகத் துறைக்கு நோபல் பரிசு இருந்தால், அதனைப் பெறத் தகுதி இவருக்கு உண்டு என்ற குறிப்பையும் வழங்கியது. பிரபல ரியல் எஸ்டேட் அதிபர் அரிமா லியோ முத்து அவர்கள் சென்னை மையப் பகுதியில் பல கோடி மதிப்புள்ள வீட்டு மனையை ஐயாவிற்கு பரிசாக அளித்தார். ஆனால் அது தனது கொள்கைக்கு முரணானது என அப்பரிசை ஏற்றுக்கொள்ள பணிவுடன் மறுத்து விட்டார்கள்.

ஐ.நா. சபை விருது 20-ம் நூற்றாண்டின் இணையற்ற சாதனையாளராக ஐ.நா. சபை உலகெங்கிலும் தேர்ந்தெடுத்த 20 பேர்களில் ஐயாவும் ஒருவர். பாலம் ஐயாவைப் பற்றிய ஆவணப்படம் நார்வேயில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட

விழாவில் சிறப்புப் பரிசு பெற்றது.

பாலம் ஐயா நோயுற்று மருத்துவனையில் இருந்தபோது மருத்துவச் செலவிற்காக மக்களிடம் ஒரு ரூபாய் வேண்டினார். இவரது வேண்டுகோளை மதித்து மேயர், சபாநாயகர், கவர்னர் மட்டுமல்லாமல் அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களும் ஒரு ரூபாய் அனுப்பினார்கள்.

கோடிக்கணக்கில் அள்ளிக் கொடுத்த இவர் ஏழைகளுக்குக் கிட்டாத உணவையோ, உடையையோ, இருப்பிடத்தையோ பயன்படுத்தாமல் எளிய வாழ்க்கை வாழ்ந்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. பாலம் ஐயாவின் தந்தையார் திரு பால்வண்ணநாதன், ஒரு கோவிலின் அறங்காவலராக இருந்தபோது, கோவில் பணியாளர் ஒருவர் கோவில் வளாகத்திலுள்ள பலா மரத்திலிருந்து ஒரு பலாப்பழத்தை எடுத்து வந்து வீட்டில் கொடுத்தார். அதில் சில சுளைகளை மனைவியும், குழந்தைகளும் சாப்பிட, அதனை மாபெரும் குற்றமாகக் கருதி அதற்கு பிரயாச்சித்தமாக ஒரு வயலை கோவிலுக்கு எழுதி வைத்தார். அதன் இன்றைய மதிப்பு பல லட்சம்.

பாலம் ஐயாவின் அன்னையார் தாயம்மாள் 1. எதற்காகவும் பேராசைப்படாதே. 2. எது கிடைத்தாலும் பத்தில் ஒன்றை தானம் செய். 3. தினமும் ஓர் உயிருக்கு நல்லது செய்தால் வாழ்க்கையில் எப்பொழுதும் மகிழ்ச்சி நிலவும் என்ற தாயார் வழங்கிய அறிவுரையே அவரது அனைத்து சேவைகளின் மையமாகத் திகழ்கிறது.

**only service mind has a beautiful heart.**

## நம்மவர் கூட்டு வழிபாடு



கோவை அ.வ.ந. சங்கத்தின் சார்பாக பேரூர் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமிக்கு 18-09-2022 அன்று காலை 187-வது அபிஷேகம் ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. நகரத்தார் பெருமக்கள் திரளாக கலந்து கொண்டனர். அனைவருக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

**தகவல் : திரு ம. கதிரேசன், கோவை.**

உ

ஸ்ரீ வயிரவ சுவாமி துணை

வாழ்த்துகளுடன்

கடை: 94432 06431
97867 46431

வீடு: 97874 81103

# சிவசக்தி ஸ்டோர்ஸ்



279, அண்ணாசாலை,
**பொன்னமராவதி.**

**மளிகை, ஆயில், ஸ்டேசனரி மற்றும்
குளிர்பானங்கள் மொத்தம் & சில்லறை**

# அன்னம் டிரேடர்ஸ்





வடுகநாதன் ரோடு,
KVB பேங்க் அருகில்,
**பொன்னமராவதி.**

ஸ்டாக்கிஸ்ட்:
**நெஸ்டில், மைசூர் சோப்,
ராஜம் சுக்கு காபி,
பண்ணாரி மைதா.**

# ராநா கெஸ்ட் ஹவுஸ்

KVB பேங்க் அருகில், **பொன்னமராவதி.**

முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) ரூம்கள்,
சிறிய பெரிய அளவுகளில், நிறைந்த வசதிகளுடன்,
நிறைவான கட்டணத்தில்,
நகரின் மத்தியில் தரமான தங்கும் விடுதி.



# 44-வது செஸ் ஒலிம்பியாட் தீபம் தொடர் ஓட்டத்தில் நம்மவர்



திண்டுக்கல் திரு M. சரவணன் – சுதா இவர்களின் மகள் செல்வி S. விஷாலி திண்டுக்கல்லில் 30-07-2022 அன்று மாவட்ட அளவில் நடைபெற்ற யோகாசன போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்று கேடயமும், சான்றிதழும் பெற்றுள்ளார். அதே தேதியில் நடைபெற்ற ஐந்து பேர் சேர்ந்து குழுவாக செய்யக்கூடிய (Free Flow) யோகாவில் முதல் பரிசு பெற்று சான்றிதழும், பதக்கமும் பெற்றுள்ளார்.

26-07-2022 அன்று M.S.P. பள்ளியில் 44-வது செஸ் ஒலிம்பியாட் தீபம் தொடர் ஓட்டத்தில் திண்டுக்கல் சார்பாக செல்வி விஷாலியும் கலந்து கொண்டார்.

**தகவல்: திரு M. சரவணன், திண்டுக்கல்**

யோகசனப் போட்டியிகளில் தொடர் வெற்றிகளை குவித்துவரும் S. விஷாலியை பாராட்டுவதில் கல்வி வளர்ச்சிக் கழகம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது. இவர் மேலும் பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியடைய வாழ்த்துகிறோம்.

**– கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**



# திருமணச் செய்தி

திருநிறைச் செல்வன் : **M. சூர்ய பிரகாஷ்** B.Tech., PGDDM.
திருநிறைச் செல்வி : **K. மோகன சுந்தரி** B.E.
மணமகனின் பெற்றோர் : கழுகக்கூருடையார்
திரு **ரா. முருகப்பன் செட்டியார் – மலர்விழி ஆச்சி,**
தஞ்சாவூர்
மணமகளின் பெற்றோர் : பொன்னமராவதி
பூண்டிலூருடையார் திரு **ச. கிருஷ்ணசாமி செட்டியார் – பானுமதி ஆச்சி,** கோயமுத்தூர்.
நிகழ்விடம் : M.R. திருமண மண்டபம்,
டவுன் போலீஸ் ஸ்டேசன் ரோடு,
தஞ்சாவூர்.
மணநாள் : 30-10-2022 ஞாயிற்றுக்கிழமை

---

மணமக்கள்
திருநிறைச் செல்வன் : **தி. சங்கர் B.E.,**
திருநிறைச் செல்வி : **மா. இளவரசி MCA., B. Ed.,**
மணமகனின் பெற்றோர் : பணப்பாக்குமூருடையார்
தெய்வத்திரு **பழ. திருஞானம் செட்டியார்**
நலமுடன் திருமதி **தி. ராஜேஸ்வரி ஆச்சி**
மணமகளின் பெற்றோர் : பொன்னமராவதி பூண்டிலூருடையார்
திரு **சி. மாதவன் செட்டியார்–**
திருமதி **மா. பரிமளா ஆச்சி,** தஞ்சாவூர்.
பூர்வீகம் – சொக்கம்பட்டி.
நிகழ்விடம் : பொன்னமராவதி வர்த்தகர் கழக மஹால்.
மணநாள் : 08-09-2022 வியாழக்கிழமை.







# புதிய கல்விக்காவலர்கள்

## கல்விக்காவலர்-39



மேலூருடையார்
தே.மா.சுப்பையா செட்டியார்
சுப. பூங்கோதை ஆச்சி,
பொன்னமராவதி.

**பெற்றோர் : திரு தே. மாணிக்கம் செட்டியார்**
**தேனம்மாள் ஆச்சி**

**பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் மகள்கள் :**

1. திருமதி. **M.மாலதி** D. Pharm - திரு. **PL. முருகேசன்**
   **ஸ்ரீ முருகன் மெடிக்கல்ஸ்,**
   N.G.G.O. காலனி, கோவை-22.
2. திருமதி. **S. ஜெயந்தி**-திரு. **A. சண்முகநாதன்,**
   நாகம்மாள் நோட்புக்ஸ், செல்வபுரம், கோவை-26

## கல்விக்காவலர்-40



திரு S. மாணிக்கம் செட்டியார் -
திருமதி சுசீலா ஆச்சி,
தஞ்சாவூர் .

**கல்விக்காவலர் குடும்பத்தினர்**

பெற்றோர் : தெய்வத்திரு A. சேதுராமன் செட்டியார் -
நலமுடன் திருமதி சரோஜா ஆச்சி.

மகன் - மருமகள் :

திரு. M. அண்ணாமலை - திருமதி. பவித்ரா
பேத்திகள் மஹிரப்பிரியாள் & மிதுரப்பிரியாள்

மகள்-மருமகன் :

திருமதி S. அன்பு பிரியா - திரு S. சரவணன்.
பேத்தி யாஷினி.

## கல்விக்காவலர்-41



கமுகக்கூருடையார்
**திரு. தேனப்பன் செட்டியார் -**
**திருமதி சந்திரா ஆச்சி**
கோவை.

**கல்விகாவலர் குடும்பத்தினர்**

**பெற்றோர் :** கிருங்காக்கோட்டை கமுகக்கூருடையார்
தே. சொக்கன் செட்டியார்-மீனாட்சி ஆச்சி

**தேனப்பன் செட்டியார் சகோதரர்கள் / சகோதரி :**
பழனியப்பன் செட்டியார், சுப்பையா செட்டியார்,
ஞானம் & சகோதரி அழகு மீனாள் சிவலிங்கம்.
கோவை தேனப்பன்

**சந்திரா ஆச்சி சகோதரர்கள், சகோதரி :**
திரு. காசி அலங்காரம் செட்டியார்,
திரு. தர்மலிங்கம் செட்டியார், திரு. ராமசாமி
செட்டியார், சகோதரி திருமதி சீதாலெட்சுமி ஆச்சி.

## கல்விக்காவலர்-42



அரும்பாக்கிளையார்
தெய்வத்திரு
**ம.பொ. மாணிக்கம் செட்டியார்**
தெய்வத்திருமதி
**ம.பொ.மா. வேலுமயிலி ஆச்சி**
சிறுகுடி

**கல்விக்காவலர் குடும்பத்தினர்**

**மகன் - மருமகள் :**

திரு. M. சாமிநாதன் - S. பேபிராணி,

திரு. M. கனகராஜ் - K. இளவரசி

**மகள் - மருமகன் :**

அமுதா - சுப்பையா

# தன்னம்பிக்கை கதை

ஒரு அரசன் போட்டி ஒன்றை அறிவித்தான். "கோட்டைக் கதவைக் கைகளால் திறந்து தள்ள வேண்டும்; வெற்றி பெற்றால் நாட்டின் ஒரு பகுதி தானமாக வழங்கப்படும்; தோற்றால் தோற்றவனின் கை வெட்டப்படும்." மக்கள் பலவாறாக யோசித்து, பயந்து, யாரும் போட்டியில் கலந்து கொள்ளவில்லை. ஒரே ஒரு இளைஞன் மட்டும் போட்டியில் கலந்து கொள்ள முன் வந்தான். ஊர் மக்கள் "போட்டியில் தோற்று விட்டால் கைகளை வெட்டி விடுவார்கள். உன்னுடைய எதிர்காலம் என்னவாகும்? "என்றார்கள். அவன் சொன்னான், "ஐயா வென்றால் நானும் ஒரு அரசன், தோற்றால் கைகள் தானே போகும் உயிரில்லையே" என்று கூறிவிட்டு கோட்டைக் கதவை இளைஞன் தள்ளினான். என்ன அதிசயம்! கதவு சட்டெனத் திறந்து கொண்டது. ஏனென்றால், கோட்டைக் கதவுகளில் தாழ்ப்பாள் போடப்படவில்லை. திறந்துதான் இருந்தது. பல பேர் இப்படித் தான் இருக்கிறார்கள். "தோற்று விடுவோமோ, எதையாவது, இழந்து விடுவோமோ" என்று எதற்கும் முயற்சிக்காமலேயே விட்டு விடுகிறார்கள். அனைவரும் அறிந்த முயல் - ஆமை கதையில் முயலின் தோல்விக்கு முயலாமையே காரணம். ஆகையால் தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்து வெற்றி பெறுவோம்.

**- ஆசிரியர் குழு**

# விநாயகர் சதுர்த்தி விழா



ஆலவயல் அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோவிலில் 31-08-2022 புதன்கிழமை காலை 9 மணியளவில் விநாயகர் சதுர்த்தி விழா அபிஷேகம் ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள், நகரத்தார் பெருமக்கள் பெருமளவில் கலந்து கொண்டார்கள். நிறைவாக அனைவருக்கும் பிரசாத பை வழங்கப்பட்டது.

**தகவல் : திரு பழ. சொக்கலிங்கம், செய்தித் தொடர்பாளர், ஆலவயல்.**

# ஆலவயல் சங்கத்தின் 11-வது ஆண்டு விழா

ஆலவயல் அ.வ.ந. சங்கத்தின் 11-வது ஆண்டு விழா ஆலவயல் ஊராட்சி மன்ற சமுதாய மண்டபத்தில் 12.6.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று செயல்தலைவர் திரு சிவ. கருப்பையா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. காலையில் அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலிலும் மற்றும் அருள்மிகு வள்ளித்தாய் அம்மாள் கோவிலும் சிறப்பு வழிபாடும் சித்தர்கள் பூஜை வழிபாடும் நடைபெற்றது. கலந்து கொண்ட பக்தர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. அன்று 10 மணியளவில் அருள்மிகு வேட்டைக்காரசுவாமி கோவிலில் பழம் மற்றும் பூஜை முடித்து, மேற்படி மண்டபத்தில் 12 மணியளவில் இறை வணக்கத்துடன் பொதுக்குழுக் கூட்டம் ஆரம்பமானது.

திரு சிவ. கருப்பையா அவர்கள் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். செயலாளர் திரு சுப்பிரமணியன் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு சொக்கலிங்கம் வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். பொதுக்குழுக் கூட்டத்தில் அ.வ.ந. பொதுநலச் சங்கத் தலைவர் திருM.S.முருகப்பன் அவர்களும், பொதுநலச்சங்க நிர்வாகிகளும், பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தலைவர் திரு M. இராமசாமி அவர்களும் மற்றும் நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். பொதுநலச் சங்கத் தலைவரிடம் முதியோர் உதவித்தொகை ரூ. 5001/- சங்கத்தின் சார்பாக வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும், வெளியூர் நகரத்தார்களும் பெருமளவில் கலந்து கொண்டார்கள். உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

சிறுவர், சிறுமிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டன. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டன. செயலாளர் திரு சுப்பிரமணியன் தலைமை உரையாற்றினார். பொருளாளர் திரு சொக்கலிங்கம் நன்றி நவில, தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.

**தகவல் : திரு பழ. சொக்கலிங்கம்,**
**கல்வி வளர்ச்சிக் கழகச் செய்தித் தொடர்பாளர், ஆலவயல்.**

# கம்ப இராமாயணம் தொடர் வாசிப்பு நிகழ்ச்சி



பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் திலகவதியார் அருள்நெறி மாதர் சங்கம் சார்பில் 29-ஆம் ஆண்டு கம்ப இராமாயண தொடர் வாசிப்பு நிகழ்ச்சி புரட்டாசித் திங்கள் 7-ஆம் நாள் 24.09.2022 முதல் 02.10.2022 வரை பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் மங்கைநாயகர் மன்றத்தில் பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தின் தலைவர் திரு மா. இராமசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பொன்னமராவதி அ.வ.ந. சங்கச் செயலாளர் திரு மா. சரவணன் அவர்கள், பொருளாளர் திரு சொ. செந்தில்குரு, இளைஞர் பேரவைத் தலைவர் திரு இரா. மணிகண்டன், செயலாளர் திரு சா. சுரேஷ், பொருளாளர் திரு நா. தண்டாயுதபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கு வருகை புரிந்தவர்களை மாதர் சங்கச் செயலாளர் திருமதி மோகனா அன்பு சண்முகம் அவர்கள் வரவேற்று உரை ஆற்றினார். திருமதி கற்பகம் ஜெயமுருகேசன் அவர்கள் தலைமையுரையாற்றினார். **இராமாயண தொடர் வாசிப்பு நிகழ்ச்சியை தேசிய நல்லாசிரியர் திரு நா. திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்த்தினார்கள்.** திரு சி.சு. முருகேசன் அவர்கள் 3 நாட்கள் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள்.

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் பொதுநலச்சங்கத்தின் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்கள், பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தின் ஆலோசகர்கள் திரு S. வேலாயுதம், திரு மலை. லெட்சுமணன், அறமனச்செம்மல் திரு அரு.வே. மாணிக்கவேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் தினந்தோறும் கேள்வி-பதில்கள் நிகழ்ச்சி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. நாள்தோறும் நகரத்தார் சார்பில் பிரசாதங்கள் படைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. இராமர் பட்டாபிஷேகத்தன்று இளைஞர் பேரவையின் சார்பாக பட்டாபிஷேக விருந்து வழங்கப்பட்டது. விழாவின் நிறைவாக மாதர் சங்கப் பொருளாளர் திருமதி ஆனந்தி பழனியப்பன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

**தகவல் : சொ. செந்தில்குரு, பொருளாளர், பொன்னமராவதி**

# பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தின் 50-ஆம் ஆண்டு (பொன்விழா) பொதுக்குழுக் கூட்டம்



பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தின் 50 ஆம் ஆண்டு விழாவும், இளைஞர் பேரவையின் 40 ஆம் ஆண்டு விழாவும், திலகவதியார் மாதர் சங்கத்தின் 39 ஆம் ஆண்டு விழாவும் பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் மங்கைநாயகர் மன்றத்தில் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.

மாதர் சங்கத்தினர் திருவிளக்குப்பூஜையுடன் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. விழாவில் அ.வ.ந. சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. பொன்னமராவதி அ.வ.ந. சங்க இணைத்தலைவர் திரு இராம.ச. இராஜா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அ.வ.ந. சங்கத்தின் தலைவர் திரு மா. இராமசாமி அவர்கள் தலைமையுரையாற்றினார். ஆண்டறிக்கையில் செயலாளர் திரு மா. சரவணன் அவர்கள் சங்கத்தின் ஓராண்டு சாதனைகளை சமர்ப்பித்தார். சங்கத்தின் வரவுசெலவு அறிக்கையை பொருளாளர் திரு சொ. செந்தில்குரு அவர்கள் வாசித்தார். சங்கத்தின் சேமிப்புத்திட்ட வரவு-செலவு அறிக்கைகளை சேமிப்புத் திட்ட பொறுப்பாளர்கள் திரு M.S.M. சுவாமிநாதன் அவர்களும் மற்றும் திரு ச. சுந்தரமூர்த்தி அவர்களும் வாசித்தனர்.

அ.வ.ந. சங்கத்தின் இளைஞர் பேரவையின் தலைமையுரை மற்றும் சேமிப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்தும் தலைவர் திரு இரா. மணிகண்டன் அவர்கள் உரையாற்றினார். இளைஞர் பேரவையின் ஆண்டு முழுவதும் நடைபெற்ற நிகழ்வுகள் செயலாளர் திரு ச. சுரேஷ் அவர்கள் தொகுத்து வழங்கினார். சங்கத்தின் வரவு-செலவு அறிக்கையை பொருளாளர் திரு நா. தண்டயுதபாணி அவர்கள் சமர்ப்பித்தார்.

தலைமையுரை ஆற்றிய அ.வ.ந. மாதர் சங்கத்தின் தலைவி திருமதி கற்பகம் ஜெயமுருகேசன் அவர்கள் சேமிப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். செயலாளர் திருமதி மோகனா அன்பு சண்முகம் அவர்கள் தனது உரையில் மாதர் சங்கத்தில் ஆண்டுமுழுவதும் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து விரிவாக எடுத்துரைக்க, சங்கத்தின் வரவுசெலவு அறிக்கையை பொருளாளர் திருமதி ஆனந்தி பழனியப்பன் அவர்கள் சமர்ப்பித்தார்.

இளைஞர் பேரவையின் சேவைகளுக்கும், மாதர் சங்கத்தின் சேவை மற்றும் தண்ணீர்பந்தல் சேவைகளுக்கும், பொன்னமராவதி சங்க செயற்குழு உறுப்பினர்களுக்குப் பாராட்டுக்களும், மூத்த சேமிப்புத்திட்ட உறுப்பினர்களுக்குப் பாராட்டு நிகழ்வுகளும் நடைபெற்றது.

பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தின் சார்பில் 2021-22 கல்வியாண்டில் 10, 12, ஆம் வகுப்பில் முதலிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம் மற்றும் 60 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு ஊக்கப்பரிசு வழங்கி பாராட்டப்பட்டனர். சிறப்புப் பரிசாக 10, 12 ஆம் வகுப்பில் முதலிடம் பெற்றவர்களுக்கு அறமனச் செம்மல் அரு.வே. மாணிக்கவேலு அவர்கள் ஊக்கப்பரிசுத் தொகை வழங்கிப் பாராட்டினார்கள்.

**தகவல் : திரு சொ. செந்தில்குரு, பொருளாளர், பொன்னமராவதி**



## கந்தசஷ்டி விழாவில் குந்தவை நாச்சியார் வேடம்

29-10-22 சனிக்கிழமை தேவகோட்டையில் நடைபெற்ற கந்த சஷ்டி விழாவில் திரு சா. பாபு - முத்துலெட்சுமி தம்பதியரின் மகள் **பா. வர்ஷினி** கலந்து கொண்டு குந்தவை நாச்சியார் வேடமிட்டு பரிசும் பாராட்டும் பெற்றார்.

தகவல் : திரு சா. பாபு, தேவகோட்டை.

ஸ்ரீ மலையாள சாஸ்தா அய்யனார் துணை

தொடக்கம்
2003



குடிப்பட்டம்: மேலூருடையார்
செல்: 89407 22771
பூர்வீகம்: K. புதுப்பட்டி



காசாளர் : அ.ச. அலங்கார குமரன்

# ஸ்ரீ சாஸ்தா

## ஐயங்கார் பேக்கரி

PNS

கடை முகவரி: ஸ்ரீ சாஸ்தா ஐயங்கார் பேக்கரி, மில் ஸ்டாப்,
பல்லடம் ரோடு, கணபதிபாளையம் பிரிவு,
திருப்பூர்–641 605 செல்: 978718 2883

பொன்மொழி : நம்மை உற்சாகப்படுத்தி, மகிழ்ச்சி தந்து எப்போதும்
ஆனந்தம், வெற்றி இவைகளைத் தருவது புத்தகம் மட்டுமே!



உயர்தர இனிப்பு மற்றும் கார வகைகள்,
பிறந்த நாள் கேக் வகைகள்,
ஐஸ்கிரீம், பிரஸ் ஜூஸ், டீ, காபி
இவை அனைத்தும் இங்கு கிடைக்கும்.



**‘உலக நன்மைகளும்**
**சுவாரஸ்யமான சிவ ரகசியங்களும்’**
என்ற தலைப்பில் நூல் விரைவில் வெளி வருகின்றது

நூலாசிரியர் : **அ.ச. அலங்கார குமரன்,**
K. புதுப்பட்டி



**நல்வாழ்த்துகளுடன்**

**அ.ச. அலங்கார குமரன்**
மனைவி : **அ. ரேவதி,** L.I.C. Agent
மகன் : **அ. அரவிந்த்** B.E.
மகள் : **அ. கனிஅமுது**



பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தின்

# 50-ஆம் ஆண்டு பொன்விழா



பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தின் 50 ஆம் ஆண்டு (பொன்விழா) 02-10-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மங்கைநாயகர் மன்றத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. முதலில் விழா நடனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. விழாவிற்கு சங்கத்தின் தலைவர் திரு மா. இராமசாமி அவர்கள் தலைமை ஏற்றார். செயலாளர் திரு மா. சரவணன் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தின் 50 ஆண்டுகால சாதனைகளைப் பாராட்டி அ.வ.ந. பொதுநலச்சங்கத்தின் தலை திரு M.S. முருகப்பன் அவர்களும், செயலாளர் திரு மு. சாமிநாதன் அவர்களும், பொருளாளர் திரு சு. மங்கைபாகன் அவர்களும் உரையாற்றினார்கள். மேலும் விழாவில் பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தைப் பாராட்டி அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு செ. ஆசைஅலங்காரம் அவர்களும், செயலாளர் திரு மு. இராமலிங்கம் அவர்களும், பொருளாளர் திரு சு. முத்து அவர்களும் உரை நிகழ்த்தி வாழ்த்தினார்கள். மற்றும் அனைத்து ஊர்களிலிருந்தும் வருகைபுரிந்த நகரத்தார் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பொன்விழா காணும் பொன்னமராவதி சங்கத்தை வாழ்த்திப் பேசினார்கள். விழாவில் அனைத்து ஊர் நகரத்தார் சங்க நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

அ.வ.ந. பொதுநலச் சங்கம் வழங்கும் முதியோர் உதவித்தொகைக்கு பொன்னமராவதி அ.வ.ந. சங்கத்தின்

பங்களிப்பாக ரூ.10,000 வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக 50 ஆண்டுகாலம் பதவி வகித்த முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் அழைக்கபட்டு நினைவுப் பரிசுகள் வழங்கி மரியாதை செய்யப்பட்டனர். சங்கத்தின் பொருளாளர் திரு சொ. செந்தில்குரு நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவுபெற்றது.

அன்று மதியம் இளைஞர் பேரவையின் சார்பில் மாணவச் செல்வங்களுக்கு பேச்சுப் போட்டி, நடனப்போட்டி, மாறுவேடப்போட்டி ஆகியவைகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. அன்று மாலை மாதர் சங்கத்தின் சார்பில் வெற்றிக்கூட்டாளி நிகழ்ச்சி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

அனைத்து நிகழ்ச்சிகளையும் திரு ச. சுந்தரமூர்த்தி திரு பழ. தேனப்பன், மற்றும் திரு கா. முத்துக்கருப்பன் ஆகியோர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

**தகவல் : திரு சொ. செந்தில்குரு, பொன்னமராவதி**

உ

ஸ்ரீ வாத்தியார் ஐயா துணை ஸ்ரீ நாகம்மாள் துணை ஸ்ரீ சேவுகமூர்த்தி துணை

**உரிமை : S. நாகராஜ், R. சேகர்**





**ஸ்ரீ நாகா கூல்கேர் & டிராவல்ஸ்**

**Sri Naga Cool & Travels**

சிறுவர் பூங்கா அருகில், **சிங்கம்புணரி - 630 502**

**கார் வாடகைக்கு கிடைக்கும்**

**98940 71382, 78268 79248**



அனைத்து முன்னனி நிறுவனங்களின்
A/C, Fridge, Washing machine, water Heater,
சிறந்த முறையில் பழுது நீக்கித் தரப்படும்



# ஸ்ரீமத் பகவத் கீதை ஆராய்ச்சிப் போட்டியில் வெற்றிவாகை சூடிய நம்மவர்



அகில இந்திய பகவத் கீதா சம்மேளனம்,**03.09.2022** முதல் **07-09-2022** தேதி வரை, இராஜஸ்தான் அபு மலையில் அமைந்துள்ள பிரம்மா குமாரிகள் அகில உலக தலைமையகத்தில், அகில இந்திய ஸ்ரீமத் பகவத்கீதை ஆராய்ச்சி மாநாடு ஒன்றை நடத்தியது.




இந்த ஸ்ரீமத் பகவத்கீதை ஆராய்ச்சிப் போட்டியில் பூர்வீகம்–சொக்கம்பட்டி, திண்டுக்கல் பிஎஸ்என்ஏ பொறியியல் கல்லூரியில் ஆராய்ச்சி மாணவரான பா. கார்த்திகேயன் M.E.Ph.D. பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார். இவரின் தந்தை திரு M. பாலசந்திரன் கம்பிளியம்பட்டியில் தொழில் செய்து வருகிறார்.

அகில இந்திய அளவில் நடைபெற்ற ஸ்ரீமத் பகவத் கீதை ஆராய்ச்சிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ள திரு பா. கார்த்திகேயன் அவர்களை கல்வி வளர்ச்சிக் கழகம் பாராட்டுகிறது. இவர் மேலும் பல வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துகிறது. **- அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**

## நம் கண்களுக்கு நன்மை செய்யும் பழங்கள்

1. சிட்ரஸ் பழங்கள்
2. பெர்ரி
3. வாழைப்பழங்கள்
4. மாம்பழம் மற்றும் பப்பாளி
5. பாதாமி பழம்



N. நிவேதா, D/o. கார்த்திகா, சிறுகுடி. (மதுரை)

# சித்தர்கள் பௌர்ணமி பூஜை



அருவாயூர் வடக்குவளவு நகரத்தார்கள் அனைவரும் சுபிட்சம் அடையும் பொருட்டு ஆலவயல் அ.வ.ந. சங்கத்தால் நடத்தப்படும் 125-வது சித்தர்கள் பௌர்ணமி பூஜை **14.6.2022 செவ்வாய்க் கிழமை அன்றும், 126-வது பூஜை 13.7.2022 புதன்கிழமை அன்றும் 127வது பூஜை 11-08-2022 வியாழக்கிழமை அன்றும், 128-வது பௌர்ணமி பூஜை 09.08.2022 வெள்ளிக்கிழமை அன்றும், 129-வது பூஜை 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை** அன்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றி சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் பெருவாரியாக கலந்து கொண்டார்கள். நிறைவாக அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

**தகவல் : திரு பழ. சொக்கலிங்கம், க.வ.க. செய்தித் தொடர்பாளர்.**

உ
சிவமயம்
உடல் நலம் பேணுவோம்! உளம் மகிழ வாழ்வோம்!!
கார்த்திக் மெடிக்கல்ஸ்
காந்திபார்க், கோவை
காமாட்சி பார்மஸி

சுக்ரவார்பேட்டை, கோவை
செல் : 95144 52521

எல்லாவிதமான இங்கிலீஸ் மருந்துகளும் கிடைக்கும்
S. கிருஷ்ணசாமி
K. பானுமதி
K. மீனாட்சி B.E.
K. மோகனசுந்தரி B.E.
K. கார்த்திக் B.Sc.,

நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

தலைமுறைகள் நீடித்து நிற்கும் கட்டிடங்களின் நம்பிக்கை

ATC

# அன்பு வணிக நிலையம்

**அண்ணாசாலை, பொன்னமராவதி - 622 407.**

**போன்: 04333 262095 செல்: 94421 60385, 94434 13223**

**Texmo Industries**
Est. 1956
**டேரோ பம்புகள்**

மகத்தான அறுவடையின் ரகசியம்

Taro Pumps

GM
SWITCH TO A BETTER WORLD

NIPPON PAINT

ESSCO BY Jaquar GROUP

UltraTech CEMENT
The Engineer's Choice

Chettinad cement

RAMCO SUPERGRADE
As strong as family bonds.




SRI DURGA TMT

TNPL Cement
Give your building life long protection!

TATA TISCON SD
SUPER DUCTILE REBARS

Birla White
THE WHITEST WHITE CEMENT

FinOlex INDUSTRIES

# பொன்னமராவதி அ.வ.ந. சங்க 50வது (பொன்விழா) ஆண்டு விழா



சங்கத்தில் காந்தி ஜெயந்தி விழா
கொண்டாடப்பட்டது



பொன்னமராவதி அ.வ.ந. சங்க 50வது
ஆண்டு பொன்விழாவில் பங்குபெற்றவர்கள்



பொன்னமராவதி அ.வ.ந. சங்க
குழந்தைகளின் வரவேற்பு நடனம்



கோவை அ.வ.ந. சங்க நிர்வாகிகள்
பொன்னமராவதி அ.வ.ந. சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டி
வாழ்த்தி நினைவுப்பரிசு வழங்குதல்



திண்டுக்கல் அ.வ.ந. சங்க நிர்வாகிகள்
பொன்னமராவதி அ.வ.ந. சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டி
வாழ்த்தி நினைவுப்பரிசு வழங்குதல்



பொன்னமராவதி அ.வ.ந. சங்க நிர்வாகிகளுக்கு
பொன்னமராவதி அ.வ.ந. இளைஞர் பேரவை நிர்வாகிகள்
பாராட்டி வாழ்த்தி நினைவுப்பரிசு வழங்குதல்



மாதர் சங்க நிர்வாகிகளுக்கு
பாராட்டி நினைவுப்பரிசு வழங்குதல்



பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற
குழந்தைகளுக்கு பாராட்டி பரிசு வழங்கபட்டது

# மணப்பாறை
# திரு. M. சேதுராமன் - திருமதி. சாந்தி மணிவிழா

**05-09-2022** அன்று மணப்பாறையைச் சேர்ந்த

திரு Rtn. PHF. Er. **M.சேதுராமன்** B.E.,M.B.A., M.D. (Acu.) – திருமதி **சாந்தி** B.Com.

தம்பதியரின் அறுபதாம் ஆண்டு நிறைவு **சஷ்டியப்த பூர்த்தி விழா (மணிவிழா)**

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ அபிராமி அம்பாள்

உடனுறை அருள்மிகு ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.













தகவல்: **S. விஜய்** B.E., ABUDHABI, UAE



பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்

- திருவள்ளுவம்

## நல்வாழ்த்துகளுடன்...

**DEEPA ERECTORS PRIVATE LIMITED**
No. 16/5, 1st Main Road, Ramakrishna Nagar,
Ernavoor, Chennai - 600057
mail to : depl@depltd.in

**PHOENIX OILFIELD SERVICES & CONTRACTING LLC**
P.O. BOX: 1151, WADI KABIR P.C. 117,
Sultanate of Oman.

*Specialists in :*

**Construction of Storage Tanks, Pressure Vessels, Pipelines and Blasting & Painting in India & Overseas**



R. Paramasivam B.E.,
***Managing Director***
Ph.: 9884660379



Pa. Mathivanan B.E.,
***Chief Executive Officer***
& A. Nivetha B.E., M.B.A.,
***Business Analyst***



Pa. Shankar B.E., M.S., (Sweden)
***Consultant***

# டிராகன் பழம்



சர்க்கரை நோயைக் கட்டுக்குள் வைக்க சில பழங்கள் உதவுகின்றன. அவற்றில் ஒன்று தான் டிராகன் பழம். இதன் காரணமாகவே இப்பழம் சமீபகாலமாகவே மக்களிடையே பிரபலமாக உள்ளது. இந்த டிராகன் பழத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம். சப்பாத்திக்கள்ளி பழத்தைப் போலவே காணப்படும் இது, கற்றாழை குடும்பத்தைச் சார்ந்த கொடி போன்ற ஒட்டுயிர் தாவரம் ஆகும். அடர் சிவப்பு நிறத்தில் காணப்படும் இந்தப் பழத்தின் சதைப் பகுதி, சிறு கருப்பு விதைகளுடன் வெள்ளை நிறத்தில் காணப்படுகிறது. உலகில் வெப்ப மண்டலப் பகுதிகளில் இப்பழம் அதிகம் பயிரிடப்படுகிறது.

இனிப்பு மற்றும் புளிப்புச் சுவை கலந்த இந்தப் பழம் அமெரிக்காவில் விளைந்து பின் கிழக்கு ஆசியாவில் அதிக அளவில் பயிரிடப்படும் பழமாக இருக்கிறது. தாய்லாந்து மற்றும் வியட்நாம் மக்கள் இந்தப் பழத்தை அதிகமாக விரும்பி சாப்பிடுகின்றனர். இதன் தோற்றம் டிராகன் போல் இருப்பதால் இதற்கு டிராகன் பழம் என்று பெயரிடப்பட்டது. டிராகன் பழம் உடலுக்கு குளிர்ச்சியைத் தரக் கூடியது. இப்பழத்தில் ஆன்டி ஆக்சிடன்டுகள் இருப்பதால், புற்றுநோய் வருவதைத் தடுக்கிறது. டிராகன் பழம் உயர்ந்த ரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. இதயத்தில் உள்ள ரத்த நாளங்களை நன்றாகச் செயல்பட வைக்கிறது.

உடலின் கொலஸ்ட்ரால் அளவை குறைப்பதில் டிராகன் பழம் உதவுகின்றன. இப்பழத்தில் 90% நீரும், அதிக நார்ச்சத்தும் இருப்பதால் இவை உடலை அதிக நேரம் பசியின்றி வைத்திருக்கவும், அதிகம் உணவு உண்ணுவதை தடுக்கவும் உதவுகின்றன. டிராகன் பழத்தில் வைட்டமின் ‘சி’ சத்து அதிகம்

இருப்பதால் அது மூச்சுக்குழாய் கோளாறுகளை குணப்படுத்த பயன்படுகிறது. இப்பழத்தில் இருக்கும் இரும்புச் சத்து ரத்த சிவப்பணுக்களின் உற்பத்திக்கு உதவுகிறது. டிராகன் பழம் அதிகப்படியான நீர்ச்சத்தை கொண்டுள்ளதால் அது சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்திருக்க உதவும். குறிப்பாக வறண்ட சருமம் உள்ளவர்கள் இப்பழத்தை உண்ணுவது நலம் தரும். வைட்டமின் ‘பி3’ இருப்பதால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளைக் குறைத்து, பருமன் இல்லாத சீரான உடலமைப்பை உருவாக்குகிறது. டிராகன் பழத்தில் கால்சியம், பாஸ்பரஸ் இருப்பதால் எலும்புகளை வலிமைப்படுத்துகிறது. பார்வைத் திறனையும், பற்களின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது.

**– V. கணேசன் B.Sc., தலைவர், அ.வ.ந. சங்கம், V. புதூர்**



ESTD : 1991

உ

ஸ்ரீ மங்கைநாயகர் தேனம்மை சுவாமிகள் துணை

நம் நகர பெருமக்களுக்கு நல்வாழ்த்துக்கள்

Off : 0461 - 2328501
Res : 0461 - 2328502
91711 70000

SARC

# ஸ்ரீ அலங்கார் ரெக்சின் சென்டர்

**Dealers in :**

**Rexine, Furniture and Furnishing Materials**

ஒரு வருட உத்திரவாதத்துடன் தேக்கு மரக்கட்டில் - டபுள் மற்றும் மெத்தை ரூ. 15,100/- மட்டும்.
(தமிழகம் முழுவதும் டெலிவரி செய்யப்படும்).

247-C/4, Palayamkottai Road, Near Old Bus-Stand, Tuticorin-628 002.
E-mail : alankarexine@gmail.com www.tuticorinalankarrexine.com

AB

# ஸ்ரீ அலங்கார் பில்டர்ஸ்

Structural Engineer ❖ Licensed Surveyor in Tuticorin City Municipal Corporation
❖ Panel Valuer in Tuticorin District Central Co.op. Bank Ltd.,

கட்டிட வரைபடம், வடிவமைப்பு, முகப்புதோற்றம்,
கட்டிட மதிப்பீடு, வரைபட அனுமதி சான்று, வாஸ்து முறைப்படி கட்டிடங்கள்
சிறந்த முறையில் செய்து தரப்படும்.

71-5, Balavinayagar Kovil Street, Upstairs Sri Alankar Rexine Centre,
Tuticorin- 628 002.
Email : tutyalankarbuilders@gmail.com www.tuticorinalankarrexine.com

நம் சமூக பணியில்...,

**அரு. சோம சண்முகநாதன்**

**S. சிவகாமி**

**S. சசிகுமார்** B.A.,DECM.,

**Er. S. பிரஹலாதன்** M.E.,

**பூதமங்கலமுருடையார், உலகம்பட்டி.**

# திருத்தி வாசிக்கவும்

✶ செப்டம்பர் 2022 மாத அருவியூர் நகரத்தார் குரல் பக்கம் 44ல் 38-வது கல்விக்காவலர் குடிப்பட்டம் கழனிவாசலூருடையார் என்பதற்குப் பதிலாக அரும்பாக்கிளையார் என்று தவறுதலாக உள்ளது. ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம். எனவே 38-வது கல்விக்காவலர், கிருங்காக்கோட்டை. திரு V. லட்சுமணன் செட்டியார் - திருமதி பாக்கியலட்சுமி ஆச்சி இவர்களின் குடிப்பட்டம் கழனிவாசலூருடையார் என்பதே சரி.

## விடுபட்ட செய்தி

✶ நகரத்தார் குரல் செப்டம்பர் 2022 பதிப்பில் அருவியூர் தந்தை தெய்வத்திரு நல்ல சுப்பையா அவர்களின் பிறந்தநாள் வாழ்த்து, நினைவஞ்சலி செய்தி வெளியிட்டதில் ஒடுவன்பட்டி தெய்வத்திரு அ. சேதுராமன் செட்டியார் அவரோடு இணைந்து வருவாய்க் குழுத் தலைவராக பணியாற்றியவர் என சேர்த்து வாசிக்கவும். அவர்களின் பெயர் விடுபட்டுள்ளது. ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

**– ஆசிரியர் குழு**


வாழ்க வையகம்! உ வாழ்க வளமுடன்!!

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

மக்கள் நோயற்ற வாழ்வு வாழவும், நோய் வந்தால் விரைவாக குணம் பெற்று நலமுடன் வாழவும் வாழ்த்துகிறோம்.

**ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

பஸ் ஸ்டாண்டு முன்புறம், பொன்னமராவதி - 622 407.

**லயன் மு. வையாபுரி ராஜ்குமார். செல் : 98426 50806**

**ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

127, முருகன் காம்ப்ளக்ஸ், கோவைபுதூர், கோவை - 641 042.

**மு. கார்த்திக் D.Pharm., செல் : 98426 50506**


**நியூ ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

அம்பேத்கார் சதுக்கம், அறிவொளி நகர், கோவை - 641 042.

அரசு ராமனாதன் MCA., செல் : 98422 44497

# சிவபாதம் சேர்ந்தார்

நாலு கரணங்களும் ஒன்றாய், நல்ல அறிவு மேற்கொண்டு,
காலும் பிரம்மநாடி வழிக் கருத்துச் செலுத்தி, கபாலநடு
ஏலவே முன்பயின்ற நெறி, எடுத்த மறை மூலம் திறப்ப
மூலமுதல்வர் திருப்பாதம் அணைவார், கயிலை முன் அடைந்தார்



கோவை அ.வ.ந. சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவரும், ஸ்ரீ மங்கைபாகர் - தேனம்மை திருமண தகவல் மைய நிர்வாகியும், திரு ஜெயக்குமார் திருமதி வாசுகி & திருமதி பொன்மணி இவர்களின் தகப்பனார் PLR. என்கின்ற உயர்திரு **PL. ரெங்கசாமி** அவர்கள் 22-09-2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.



K. புதுப்பட்டி, கிரசர் தெய்வத்திரு சா. மணிச்செட்டியார் மனைவியும், திரு ராஜா, திரு முருகானந்தம், திருமதி சாந்தி இவர்களின் தாயாருமாகிய **சிவகாமி ஆச்சி** 14.09.2022 அன்று புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

**தகவல் : திரு நா. திருநாவுக்கரசு, பொன்னமராவதி**



பொன்னமராவதி புதுவளவில் வசித்து வந்த தெய்வத்திரு தங்கையா செட்டியார் அவர்களின் மனைவியும், திருவாளர்கள் A.T. முத்துக்குமார், A.T. கணேசன், திருமதி சாந்தாமணி, திருமதி மீனாட்சி இவர்களின் தாயாருமான திருமதி **செண்பகம் ஆச்சி** அவர்கள் 19-10-2022 காலை இறைவனடி சேர்ந்தார்.

**தகவல் : திரு அ.ப. முத்துக்குமார், புதுவளவு, பொன்னமராவதி**




பூர்வீகம் சிறுகுடி, (V.புதூர்) திருமதி க. மயில் விழியின் கணவரும், V. புதூர் திரு க. அன்புச் செல்வன், திரு க. கர்ணன், தகப்பனாருமான திரு **அல. கணேசன் செட்டியார்** அவர்கள் 17.08.2022 அன்று புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

**தகவல் : திரு V. கணேசன் B.Sc., தலைவர், அ.வ.ந. சங்கம், V. புதூர்**

## நம் சமூக சேவகருக்கு

# கண்ணீர் அஞ்சலி!!

**மறைவு:**
**22-09-2022**





### PL.R. என்றால் சமூக சேவகர்.
### PL.R. என்றால் தன்னலமற்றவர்.
### PL.R. என்றால் பிரதிபலன் கருதா தொண்டர்.
### PL.R. என்றால் திருமண ஏற்பாட்டாளர்.


எண்ணற்ற நமது நகரத்தார் சமூக இளைஞர்கள்/ இளம்பெண்கள் திருமணத்திற்கு சேவைக் கட்டணமின்றி இணைப்புப் பாலமாக சேவையாற்றி அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற உறுதுணையாக இருந்த உயர்திரு **PL.R** (எ) **PL.** ரெங்கசாமி செட்டியார் அவர்கள் கடந்த 22-09-2022 நாளன்று இறைவனடி சேர்ந்தார். இவரது மறைவு நம் சமுதாயத்திற்கு பேரிழப்பாகும்.

பொய்யாமணிப்பட்டியில் பிறந்து சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கோவையில் குடியேறியவர். கோவை அ.வ.ந. சங்கம் தொடங்குவதற்கு காரணமாக இருந்து, அதன் நீண்ட கால உறுப்பினராகவும், ஆரம்பகாலத்தில் துணைத் தலைவராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். அவரின் பிரிவால் மீளத்துயரில் வாடும் அவரின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்களையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரின் எண்ணங்களை நிறைவேற்றுவதும், அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்வதும் தான் நாம் அவருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

**- செ. ஆசை அலங்காரம், தலைவர் & கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்.**

# மாபெரும் சமூக சேவகர் மறைந்தார்




**மயங்குகின்றனர் அருவியூரார்!**
**மன்னவனே! நீ இல்லையென**

இரங்கற்பா

உலக நகர் கமுகக்கூருடையாரில் ஒப்பில்லா
நீ ஒருவனே! நல் தொண்டனே
உன்னைப்போல் இலர் எவரும் என்பதே உண்மை
உற்றாரின் ஏழ்மை விரட்டி ஏற்ற தொழில் தந்தாய்!
கையெழுத்தின் அழகால் கணக்காளராய் மிளிர்ந்தாய்!
கருத்ததனால் சங்கத்தில் கற்பித்தாய் பல தீர்வு!
அய்யன் மங்கைபாகர் ஆசியால் பல் மணம் செய்வித்தீர்!
அருவியூரார் மயங்குகின்றனர்! அப்பா நீ இல்லையென!

**என்றென்றும் வழியும் கண்ணீருடன்**
**அன்பு அண்ணன்**
**தேசிய நல்லாசிரியர் நா. திருநாவுக்கரசு & குடும்பத்தார்**
**பொன்னமராவதி**
**செல் : 75300 42175 / 94425 08449**

# கண்ணீர் அஞ்சலி!!



கோவை பி.எல் ரெங்கசாமி மாமா (சமூக சேவகர்-எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராதவர்) அவர்கள் 22-09-2022 வியாழக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது இழப்பு நம் சமுதாயத்திற்கு என்றென்றும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கிறோம். அன்னாரது குடும்பத்திற்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**TMR. M. மணிகண்டன் - ஹேமலதா & குடும்பத்தார்கள்.**
**அரசு ஜுவல்லர்ஸ் & அய்யப்பா பைனான்ஸ்**
**பூமார்க்கெட், கோயம்புத்தூர்**

# இரங்கல் செய்தி

1. நமது சமூகத்தினரால் மனையற நல்வழி காட்டியவர் என்ற பட்டத்தைப் பெற்ற கோவை பிஎல்.ஆர் அவர்கள் 404 திருமணங்கள் நடக்க துணைபுரிந்த பெருமைக்குரியவர். அவர்கள் 22.09.2022 அன்று மறைந்து விட்டார் என்ற செய்தி அறிந்து மன வேதனை அடைந்தேன். அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதோடு, அன்னாரைப் பிரிந்து மீளாத் துயரில் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– திரு V. கணேசன் B.Sc., தலைவர் / அ.வ.ந. சங்கம், V. புதூர்**

2. பிஎல்.ஆர் அவர்களின் இறப்பு நமது சமூகத்தினருக்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பு என்றால் மிகையாகாது. கோயம்புத்தூரைக் தலையிடமாகக் கொண்டு **ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமணத் தகவல் மையம்** என்ற பெயரில் 2006-ல் ஆரம்பித்து 16 வருடங்கள் சேவை செய்து இச்சமூகத்திற்கு தொண்டாற்றியவர். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

**– திரு P. சிவன்ஜோதி, தஞ்சாவூர்.**

## கேட்பாரற்று கீழே கிடந்தால் எடுக்கக் கூடாத பொருட்கள்



1. சிம் கார்டு
2. மொபைல் போன்
3. மொபைல் ஹெட் செட்

பதில்: குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தாங்கள் தங்களின் மொபைல் போனில் உள்ள சிம் கார்டை கழற்றி வெளியே எறிந்து விடுவார்கள். நாம் அந்த சிம்கார்டை நம்முடைய மொபைலில் போட்டு பயன்படுத்தும்போது காவல் துறையினரிடம் சிக்கிக் கொண்டு சிரமப்பட வேண்டியிருக்கும். மொபைல் போனிற்கும் இது பொருந்தும். மேலும் மொபைல் ஹெட் செட்டானது தற்சமயம் கிருமிகள் தொற்றக் கூடிய பொருட்களில் மிக முக்கியமானதாக உள்ளது. எச்சரிக்கையுடன் இருப்போம்! சிரமங்களிலிருந்து விலகி இருப்போம்!!

**- S. ஜனனிஸ்ரீ, திண்டுக்கல்**

## 2021-2022-ல் பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள் 31.03.2022

**மாபெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **A.P. ஸேதுராமன் – விஜயலட்சுமி,** கோவை.
2. திரு. **செல்வன் R.M. செந்தில்,** பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. இராமநாதன் – சிவசக்தி** (செம்பதி) துபாய்.

**பெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் – பாப்பா ஆச்சி,** மதுரை.

**கொடை வள்ளல்கள் :**

1. திருமதி. **இராம. லதா அவர்கள்,** நத்தம்.
2. திரு. **து. அரவிந்த் குமார் B.E., M.S., – பத்மா B.E.,** சென்னை.
3. தெய்வத்திரு. STKR. **சக்திவேல் – ராஜலெட்சுமி,** பொன்னமராவதி.

**வள்ளல்கள் :**

1. திரு. **M. பாலகிருஷ்ணன் – பானுமதி ஆச்சி,** சிங்கம்புணரி.
2. திரு. **செ. ஆசை அலங்காரம் குடும்பத்தார்,** சிறுகுடி.
3. திரு. **M.S. முருகப்பன்,** பொன்னமராவதி.
4. திரு. **சொ. முருகேசன் – கவிதா,** சிவகாசி.
5. திரு. A. முருகன் - செல்வமணி நீடாமங்கலம்
6. திரு. T.M.R.S. சிவக்குமார் – அருணோதயம், கோவை
7. திரு. ம.சி.கு.கு. கணேசன் செட்டியார் – தென்னசரசி ஆச்சி கோவை

**6-12 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் நன்கொடையாளர்கள்**

1. **சிங்கம்புணரி மீனாட்சி நல்லதம்பி வலச்சேரிப்பட்டி தெய்வானை வள்ளியப்பன்** நினைவாக அவந பொதுநலச்சங்கம், பிரான்மலை.
2. தெய்வத்திரு. **மு.அ. பரமசிவம் செட்டியார் – அங்கம்மாள் ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் – பாப்பா ஆச்சி** குடும்பத்தார், மதுரை.
4. திரு. **தே.மா. பழனிச்சாமி செட்டியார் – பழ. சரஸ்வதி ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
5. தெய்வத்திரு. **தீ.பழ. பொன்னுச்சாமி செட்டியார் – அன்னமயிலி ஆச்சி** நினைவாக **A.P. ஸேதுராமன் – விஜயலட்சுமி,** கோவை.

**தங்கப்பதக்கம் வழங்கும் நன்கொடையாளர்கள் : 10ஆம் வகுப்பு**

1. முதல் கல்வி காவலர் நினைவாக, கல்விக்காவலர், கல்வி தாய் தந்தை சுப.நேசமணி செட்டியார் – புவனேஸ்வரி ஆச்சி சார்பாக கேப்டன். நே. சரவணன் பிரியா – சச்சின் நங்கநல்லூர் – சென்னை – 61
2. **அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்,** கோவை.
3. திரு. **ஆ. ஆறுமுகம் – சாந்தி,** கோவை.

**12ஆம் வகுப்பு**

4. திரு. **அரு.சோம. சண்முகநாதன் – சிவகாமி,** தூத்துக்குடி.
5. முதல் கல்வி காவலர் நினைவாக கல்விகாவலர். சுப. செல்வம் செட்டியார் ஆனந்தம் ஆச்சி சார்பாக செ.இளவரசன் – விசாலா. நங்கநல்லூர், சென்னை – 61

# புதுமனை புகுவிழா

திருவையாறு சைவப் புலவர் உயர்திரு வா.நா. சுந்தரம் செட்டியார் - அ. மீனாட்சி ஆச்சி இவர்களின் புதிய இல்லமான **'அலங்கார மாளிகை'** புதுமனை புகுவிழா 29-08-2022 திங்கட்கிழமை அன்று சுற்றம் சூழ சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : சொ. இளங்கோவன், நிர்வாகக் குழு உறுப்பினர், கல்வி வளர்ச்சிக் கழகம் / குரல் செய்தித் தொடர்பாளர், தலைவர், தஞ்சாவூர்.**

# கண்சிகிச்சை முகாம்



ஆலவயல் அ.வ.ந. சங்கம், பொன்னமராவதி லயன் சங்கம் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய கண்சிகிச்சை முகாம் 11-09-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆலவயல் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் நடைபெற்றது. பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். மேற்கண்ட முகாமில் ஆலவயல் சங்கத் தலைவர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மதிய வேளையில் சிகிச்சை பெற்றவர்களுக்கு உணவு வழங்கப்பட்டன.

**தகவல் : திரு பழ. சொக்கலிங்கம், குரல் செய்தித் தொடர்பாளர்.**

## அரசியல்வாதிகள் உரையாடல் – ஜோக்

**ஒருவர்** : தலைவர் உலக நடப்பு தெரியாதவர்னு எப்படி சொல்ற?

**மற்றவர்** : அமைதிக்காக நோபல் பரிசு வாங்க, எத்தனை நாள் மவுன விரதம் இருக்கனும்னு கேக்குறார்.

**– I. சாமி ஆஸ், 8-ம் வகுப்பு, கோவை.**

## நம்மவரில் மேலும் ஒரு பெண் மருத்துவர்



K. புதுப்பட்டி சர்க்கரை ஆச்சி வம்சத்தில் அரு. சாமியப்ப செட்டியார் – செண்பக ஆச்சியின் கொள்ளுப் பேத்தியும், கிரசர் சா. மணி செட்டியார் – சிவகாமி ஆச்சியின் பேத்தியும், திரு முருகானந்தம் – ஜெயந்தி அவர்களின் புதல்வி நந்திதா நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவருக்கு திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரியில் M.B.B.S. படிக்க இடம் கிடைத்துள்ளது.

**தகவல்: தேசிய நல்லாசிரியர், திரு நா. திருநாவுக்கரசு, பொன்னமராவதி**

நீட் தேர்வில் வெற்றிபெற்று M.B.B.S.-ல் சேரவுள்ள செல்வி நந்திதா இவரது பெற்றோருக்கும்,நமது சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவரைப் பாராட்டுவதோடு மேலும் பல சாதனைகளை நிகழ்த்தவும் வாழ்த்துகிறோம்.

**– அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**



# கல்விக் காவலர்கள்

1. **மே 2004 : முதல் கல்விக் காவலர், ஆமலூருடையார், தெய்வத்திரு. வெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சி அவர்கள், அம்மன் குறிச்சி, சென்னை.**
2. ஜூலை 2004 : மேலூருடையார், **திரு. தே.மா. பழனிச்சாமி செட்டியார் – திருமதி. சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
3. செப்டம்பர் 2006 : கழனிவாசலூருடையார் **திரு.நா. சுப்பிரமணியன்** BSc., CAIIB **திருமதி. தமிழ்ச்செல்வி** B.Lit., அவர்கள், கல்லம்பட்டி, சென்னை.
4. **மார்ச் 2007 : நாவலூருடையார், திரு. ச. கனகசபை B.E., மனோரஞ்சிதம்** அவர்கள், உலகம்பட்டி, திருச்சி.
5. ஜூலை 2007 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. இராம. வேலாயுதம் செட்டியார் – பார்வதி ஆச்சி** அவர்கள், படமிஞ்சி, சென்னை.
6. நவம்பர் 2007 : கழனிவாசலூருடையார், **தெய்வத்திரு. மு.சி.கி. நாராயணன் செட்டியார் – இராஜமாணிக்கம் ஆச்சி** அவர்கள்,கல்லம்பட்டி.
7. மே 2010 : சிக்கலூருடையார், **தெய்வத்திரு. நல்லாசிரியர் மெ. இளங்கோ – சாவித்திரி** அவர்கள். வா.புதூர்.
8. ஜூலை 2011 : அரும்பாக்கிளையார். திரு. **M.M. தியாகராஜன் B.Sc., தெய்வத் திருமதி. ஜோதிமணி** அவர்கள் புழுதிப்பட்டி. மதுரை.
9. ஜனவரி 2012 : பொன்னமராவதி பூண்டிலூருடையார். தெய்வத்திரு. மா. தங்கராஜன் – அழகுமீனாள் அவர்கள், புழுதிபட்டி பெங்களூரு.
10. மார்ச் 2012 : கழுகக்கூருடையார். **தெய்வத்திரு. மு.ஆ. இராமசாமி செட்டியார். தெய்வத்திருமதி. இராஜாமணி ஆச்சி,** சொக்கம்பட்டி.
11. மே 2012 : நாவலூருடையார், **திரு. ச. சொக்கலிங்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. தனபாக்கியம் ஆச்சி** அவர்கள் உலகம்பட்டி.
12. **ஜூலை 2012 : கழனிவாசலூருடையார். திரு. P.L. இராமஜெயம், பத்மாவதி அவர்கள், பொன்னமராவதி.**
13. செப்படம்பர் 2012 : கழுகக்கூருடையார். **தெய்வத்திரு.** M.S.M. **மாணிக்கம் செட்டியார் – சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
14. **நவம்பர் 2012 : பணப்பாக்குழூருடையார். தெய்வத்திரு. கு. சொக்கலிங்கம் செட்டியார் - சொ. தேனம்மாள் ஆச்சி, செம்பூதி.**
15. மார்ச் 2013 - அரும்பாக்கிளையார், **தெய்வத்திரு. இராம. கதிரேசன் செட்டியார். திருமதி.முத்துலெட்சுமி ஆச்சி,** புழுதிப்பட்டி.
16. **மே 2013 : மேலூருடையார். தெய்வத்திரு. தே.மா. நாராயணன் செட்டியார் – சண்முகவள்ளி ஆச்சி,** பொன்னமராவதி.
17. ஜூலை 2013 : பூதமங்கலமூருடையார். **திரு. ச. இராமலிங்கம் – இராஜமாணிக்கம்,** அயனாவரம். சென்னை.
18. நவம்பர் 2013 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. துரைராசு செட்டியார் – மீனாட்சி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை

19. ஜனவரி 2014 : நாவலூருடையார். **தெய்வத்திரு. அரு. வேலாயுதம் செட்டியார் – சம்பூர்ணம் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

**20. மார்ச் 2014 : பூதமங்கலமுருடையார். திரு. R. பரமசிவம் B.E., தெய்வத்திருமதி. சிவகாம சுந்தரி, பொன்னமராவதி, சென்னை.**

**21. ஜனவரி 2015 : பூதமங்கலமுருடையார். திரு. அ.சொ. சண்முகம் செட்டியார் – ஜெயபாரதி ஆச்சி, அம்மன்குறிச்சி, திருச்சி.**

**22. மார்ச் 2015 : அரும்பாக்கிளையார். திரு. A.P. ஜெயபால் – புவனேஸ்வரி, பொன்னமராவதி, ஈராடு.**

23. ஏப்ரல் 2015 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. ம.வெ. நாராயணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி** உலகம்பட்டி.

24. ஏப்ரல் 2015 : நாவலூருடையார். **திரு. சித. நடராஜன் செட்டியார், தெய்வத்திருமதி. இராஜம்மாள் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

25. மே 2015 : நாவலூருடையார். **திரு. அரு.வே. மாணிக்கவேலு – சரஸ்வதி,** பொன்னமராவதி.

**26. ஜூலை 2015 : ஆமலூருடையார். திரு. வெ.இராம.சுப. செல்வம்** B.Sc., ACA., **– ஆனந்தம் ஆச்சி, அம்மன்குறிச்சி, சென்னை.**

27. ஜனவரி 2016 : அரும்பாக்கிளையார், தெய்வத்திரு. **மங்கைபாகன் செட்டியார் – சிகப்பி ஆச்சி,** புழுதிப்பட்டி.

28. மே 2016 : கழுகக்கூருடையார், **திரு. சி.சொ.மு. இராமையா செட்டியார் – தெய்வத்திருமதி. ஜெகநாதம் ஆச்சி,** கொன்னைப்பட்டி, தேனி.

29. செப்டம்பர் 2017 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. நேசமணி செட்டியார் – அருள்நிதி புவனேஸ்வரி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை.

30. ஜனவரி 2018 : பணப்பாக்கூருடையார் **தெய்வத்திரு. சுப. மணிவாசகம் செட்டியார் – தேன்மொழி ஆச்சி,** காரைக்குடி.

31. செப்டம்பர் 2018 : கழுகக்கூருடையார் **திரு. சோம. கதிரேசன் செட்டியார் – தவமணி ஆச்சி,** பொன்னமராவதி, தொட்டாம்பாளையம்.

32. ஜூலை 2019 : அரும்பாக்கிளையார் **திரு. பொன். சிவஞானம் செட்டியார் – ராஜகுமாரி ஆச்சி,** சிறுகுடி.

**33. ஆகஸ்ட் 2019 : நாவலூருடையார் தெய்வத்திரு. சித. மாணிக்கம் செட்டியார் – அழகுமீனாள் ஆச்சி, பொய்யாமணிப்பட்டி.**

**34. ஆகஸ்ட் 2019 : வரதலூருடையார் ந. செல்வம் செட்டியார் – சிவயோகம் ஆச்சி, புழுதிபட்டி / கோவை.**

**35. ஜனவரி 2020 : பழனி ஆதிசைவ அன்னதான மடம் – அருள்மிகு பழனி ஆண்டவர் அறக்கட்டளை, பழனி.**

36. மார்ச் 2020 : மேலுருடையார் **தெய்வத்திரு. செ.பெ.அ. அலங்காரம் செட்டியார் – திருமதி. செம்பாயி ஆச்சி,** சிறுகுடி.

**37. அக்டோபர் 2020 :** பொன்னமராவதி **பூண்டிலூருடையார்**
**திரு. சி. வெள்ளைச்சாமி செட்டியார் - திருமதி. சாந்தி ஆச்சி, சிறுகுடி / கோவை.**

**38. டிசம்பர் 2020 : கழனிவாசலூருடையார் கிருங்காக்கோட்டை**
**திரு.** V. **லட்சுமணன் செட்டியார் - பாக்கியலட்சுமி ஆச்சி தம்பதியர்**

**39. மே 2021 :** மேலூருடையார் **செம்பூதி/பொன்னமராவதி** தெய்வத்திருவாளர்கள்
**தே.மா. சுப்பையா செட்டியார்- சுப. பூங்கோதை ஆச்சி**

40. **டிசம்பர் 2021 : பாளையூர் அம்பலம்கொண்டார் ஒடுவன்பட்டி / தஞ்சை திரு S. மாணிக்கம் செட்டியார் - திருமதி சுசீலா ஆச்சி**

41. **பிப்ரவரி 2022 : கழுகக்கூருடையார் கிருங்காக்கோட்டை / கோவை தெய்வத்திருவாளர்கள் தேனப்பன் செட்டியார் - சந்திரா ஆச்சி**

42. **ஆகஸ்ட் 2022 : அரும்பாக்கிளையார் - சிறுகுடி தெய்வத்திரு. ம.பொ. மாணிக்கம் செட்டியார் - தெய்வத்திருமதி. ம.பொ.மா. வேலுமயிலி ஆச்சி.**

## பூப்புனித நீராட்டு விழா

கழனிவாசலூருடையார் (பூர்வீகம் - ஒடுவன்பட்டி) தஞ்சாவூர் அ.வ.ந. சங்கப் பொருளாளர் திரு M. பாண்டியராஜன் செட்டியார் - லதா ஆச்சி இவர்களின் மகள் செல்வி **P. அக்ஷய பரமேஸ்வரிக்கு** பூப்புனித நீராட்டு விழா தஞ்சாவூர் சத்யா மஹாலில் 13.07.2022 புதன்கிழமை அன்று சுற்றத்தார் வாழ்த்த சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

தகவல் : திரு சொ. இளங்கோவன், குரல் செய்தித் தொடர்பாளர், தலைவர், தஞ்சாவூர்.

## தெரிந்து கொள்வோம்



பார்லிமெண்ட் கட்டடத்தின் மைய மண்டபத்தின் மேற்கூரையில் பொருத்தப்பட்டுள்ள தேசிய நினைவுச் சின்னமான **அசோக ஸ்தூபி** 9500 கிலோ எடையும், 6.5 மீட்டர் உயரமும் கொண்டது. இந்த எடையைத் தாங்கும் வகையில் இரும்பினால் வலுவான அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. களிமண்ணால் உருவாக்கம், கணினியில் கிராபிக்ஸ் முறையில் உருவாக்கம் என பல்வேறு படி நிலைகளுக்குப் பிறகு வெண்கலத்தால் அசோக ஸ்தூபியின் தேசிய நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

**- S. யுவராணி B.E., சிறுகுடி**





# நல்வாழ்வு வாழ யோகா



உயிர்களாகிய நாம், இவ்வுலக வாழ்க்கையில் முழுக்க முழுக்கத் திளைத்திருக்கும் போதே, நமக்குள்ளே இருக்கும் இறைவனோடு இடைவிடாது ஒன்றுபட்டிருப்பதே உண்மையான யோகாவாகும். உயிரை ஜீவாத்மா என்றும் இறைவனை பரமாத்மா என்றும் குறிப்பிடுவது வழக்கம். யோகங்களில் பல வகைகள் உண்டு. ஹடயோகம், இராஜயோகம், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், மந்திரயோகம் என்ற பெயர்களால் அவை வழங்கப்படுகின்றன.

சாந்தம், மகிழ்ச்சி, மனநிறைவு, பொறுமை இவையெல்லாம் மனவலிமையின் அடையாளங்கள். கோபம், பொறாமை, பேராசை, தவறான ஆசை, கருமித்தனம், கர்வம் இவையெல்லாம் மனத்தினது பலவீனத்தின் அடையாளங்கள். உடல் ஆரோக்கியத்தோடு இருக்கும் போது மனமும் ஓரளவு ஆரோக்கியத்துடன் இயங்குகிறது. உடல் நோய் வாய்ப்பட்டு விட்டால் மனமும் அந்த அளவுக்கு நோய் வாய்ப்பட்டு விடுகிறது. எனவே மனத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமானால் முதலில் நம் உடலை நாம் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு யோகாசனங்கள் பெரிதும் உதவுகின்றன.

நியாயப்படி பார்த்தால் இவ்வுடம்பும், மனமும் இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட இரண்டு தலையாய கருவிகள் என்று சொல்ல வேண்டும். ஓர் எழுத்தாளனுக்கு அவனுடைய பேனா தான் கருவி. ஒரு போர் வீரனுக்கு அவனுடைய வாள்தான் கருவி. கருவிகள் ஒழுங்காக இருந்தால் தான் எந்தத் தொழிலாளியும் தன் காரியங்களைத் திறம்படச் செய்ய முடியும். அதே போல் நம் உடலும், மனமும் ஒழுங்காக இருந்தால் தான் இவ்வுலகில் நாம் எந்தக் காரியத்தையும் செம்மையாகச் செய்ய முடியும்.

பருவுடம்பிலே நம் உணர்வு வெளிப்பட்டு விளங்குகிற ஐந்து வாயில்கள் உள்ளன. இவற்றையே நாம் மெய், வாய்,

கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்கள் ஆகும். அதேபோல நுண்ணுடலிலும் நம் உணர்வு வெளிப்பட்டு விளங்குகிற ஆறு வாயில்கள் உண்டு. அவற்றிற்கு மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞா என்று பெயர். இந்த ஆறுக்கும் மேலாக ஸஹஸ்ராம் என ஒன்றும் இருக்கிறது. மேற்கண்ட ஏழு நுண்புலன்களைப் பயன்படுத்த ஒருவர் யோகாசானம் பழக வேண்டும். ஹடயோகப் பயிற்சிகளைக் கையாளும்போதுதான் அந்தப் பயிற்சிகளின் முதிர்ச்சியால் நுண்ணுடம்பிலுள்ள நாடிகளும், சக்கரங்கள் என்ற உணர்வு நிலையங்களும் நம்முடைய அனுபவத்திற்கு வர இயலும்.

14 வருடங்களுக்கு முன் எங்களது அம்மணிக்கு ஸ்டோக் வந்து பேச, சாப்பிட, நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஒரு நல்ல டாக்டரைப் பார்த்து ஓரளவு சரியானது. பிறகு எங்களது மாமா ஒருவர் தினசரி கொடுத்த யோகாசனப்பயிற்சி மூலம் 1 வருடத்தில் நன்றாக நடந்தார்கள். அவர்களாகவே பிறர் உதவியின்றி உணவு எடுத்துக் கொண்டார்கள். அவர்களே வெந்நீர் வைத்து குளித்தார்கள். துணிகளைத் துவைத்தார்கள். அவர்களே அவர்களது வேலைகளை செய்து கொண்டார்கள். 98 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்.

ஞாபகசக்தி குறைவு, பெண்களின் மாதவிடாய் பிரச்சனைகள், சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், அல்சர், உடல் மற்றும் மூட்டுவலி போன்ற பல நோய்களையும் யோகாசனம் சரி செய்கிறது. நோயுற்றவர்கள் மட்டுமின்றி சிறியவர் முதல் பெரியவர்கள் வரை பழகலாம்.

ஆசனப்பயிற்சிகளை மெதுவாக, ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் அல்லது அரை மணி நேரம் செய்தால் போதுமானது. உங்கள் உடம்பும், உள்ளமும் புத்துயிர் பெறத் தொடங்கும். உடல் சுறுசுறுப்படையும். உடல் வலிமையடையும். ஆசனப்பயிற்சிகளை ஒரு யோகாசன ஆசிரியரிடம் கற்றுக் கொள்ள வேண்டும். ஆசனப்பயிற்சியுடன் பிரணயாமம் மற்றும் தியானமும் பழகுவது மிகவும் நல்லது.

**– திருமதி ஆனந்த செல்வம், நங்கநல்லூர், சென்னை**



# சொந்த ஊர் சொர்க்கமே!

பசுமாடு எங்குமில்லை! பால் கவரில் விற்பனைக்கு!
பசுமை ஏரி குளங்களில்லை..பாட்டில்களில் ஐஸ் தண்ணி!
பசித்தவர்க்கு பழையசோறு போடுவதற்கு பாட்டியில்லை!
நிசமாகத்தான் சொல்லுகிறேன்
இது என்சொந்த ஊர் அல்ல! அல்ல!

தோள்மீது கைபோட தோழனில்லை!
துண்டு போட்டுப் படுக்க மர நிழலுமில்லை!
கால்மீது கால்போட்டு அமர்ந்தபடி
காசு எண்ணும் முதலாளிமார்களுக்கு குறைச்சலில்லை!

ஆள்போட்டு வேலை செய்வார்
அம்மா எங்கே? அப்பா எங்கே? தெரியவில்லை!
டோல்கேட் வசூலிக்கும் பெரிய ஊரு!
இந்த ஊரு என் சொந்த ஊரு இல்லை! இல்லை!

சின்னவயசில் பிழைப்புக்காக எல்லாம் விட்டு வந்த பின்னே
என்ன இது? வாழ்க்கையென்று ஏங்காத நாளுமில்லை!
வண்ண வண்ண விளக்கொளியில் வாசமில்லா காகிதப் பூ!
என்னஇது? நகரவாழ்க்கை என் கிராமத்தைப் போலில்லை!

வெள்ளந்தி மனிதரில்லை! வயற்காடும் வரப்புமில்லை!
பக்கத்து வீட்டுக்காக பரிதவிக்கும் மனசில்லை!
கொல்லைப்புறமில்லை! திண்ணையுமில்லை!
குருவிகளைக் காணவில்லை! இல்லை! இல்லை!
இந்த நகரம் என் சொந்த ஊர் போலில்லை!

**– கோவை ம.சி.கு.கு. குழந்தைவேலன்**

## இறைவன் துணை உனக்குண்டு

துன்பங் கண்டு கலங்காதே!
இறைவன் துணையிருக்க மயங்காதே!
துயர் கண்டு நடுங்காதே!
இறைவன் அருளுண்டு துவளாதே!
மண்ணை அகழ்ந்தெடுக்க மதிப்புறு பொன்னும் மணியும்
உன்னை அகழ்ந்தெடுக்க பொறுமையும் ஞானமும் ஒளியென
உணர்வில் கலந்து ஊருக்கு நன்மை தரும்
இன்பம் வரும் இனிமை வரும்
நன்மை நன்று நாளை நல்லதாய் வரும்
வரமென அருளும் பேரும் புகழும்
பொன்னில் இருந்து அழுக்கினை எடுத்த பின்னே
பொலிவுறும் மாற்று விலையில்லா மதிப்பு பெறும்
அதுபோல் உனது நிலையும் உயர்வுறும்
இப்போது கலங்காதே
கண்ணீரில் மூழ்காதே! வெந்துயரில் வீழாதே!
வீழ்ந்தவர் என்றும் வீழ்ந்து கிடப்பதில்லை
தாழ்ந்து தலைகுனிய வாழ்ந்ததுமில்லை
அயர்ச்சிதனை விட்டுவிட்டு முயற்சிதனை முனைப்பாக
முன்னெடுத்துக் கால் அடியெடுத்து வைத்திடு
வெற்றித் திருமகள் அணைத்துக் கொள்வாள்
பேறுகள் பதினாறு அனைத்தையும் தருவாள் பாரே!!

**– அன்புமணி செட்டியார், பெங்களூரு**

## டிப்ஸ்....டிப்ஸ்...



இட்லி, தோசைக்கு மாவு அரைக்கும் போது அத்துடன் இரண்டு தேக்கரண்டி வெந்தயம் சேர்த்து அரையுங்கள். அரைத்தால் சுவை அதிகரிக்கும்.

**- J. காவியா M.Sc., பெங்களூர்.**



# சிந்தனைக் களம்

என்னால் முடியாது என்று அடிக்கடி சொல்லவே சொல்லாதீர்கள். அது ஆழ் மனதில் பதிந்து, அது முடியாது என்று நீங்கள் சொன்ன தன் வேலையை செய்து விடும். நீங்கள் எந்த வேலையில் ஈடுபட்டாலும் நம்மால் முடியாது என்று நினைத்தால் அது உங்களைத் தொடர்ந்து பலவீனப்படுத்திக் கொண்டே இருக்கும். அதற்குப் பதிலாக என்னால் முடியும் என்று அடிக்கடி சொல்லிப் பாருங்கள் அது அடி மனதில் பதிந்து, நீங்கள் செயல்படும் பொழுது ஊக்கப்படுத்திக் கொண்டே இருக்கும். விடியும் ஒவ்வொரு நாட்களையும் உற்சாகத்தோடு வரவேற்க பழகிக் கொள்ளுங்கள். அப்போதுதான் அன்றாடம் நீங்கள் செயல்படுவதற்குத் தேவையான சுறுசுறுப்பு தெம்பாக கிடைக்கும். வாழ்க்கையில் எதிர்படும் தோல்விகளைக் கண்டு அஞ்சாமல் தொடர் முயற்சிகளில் ஈடுபடுபவர்தான் வாழ்க்கையில் வெற்றி அடைகிறார்கள். பணத்தைப் பார்த்துப் பார்த்து செலவு செய்யத் தெரிந்த பலர் நேரத்தை வீணாக கண்டபடி செலவு செய்கிறார்கள். அதனால்தான் அவர்களின் முன்னேற்றம் தடைபடுகிறது. நமக்கு வேண்டிய சக்தி நமக்கு உள்ளேயேதான் இருக்கிறது. அது வேறு எங்கும் இல்லை. நாம் அதை பயன்படுத்தும் அளவைப் பொறுத்தே நமது முன்னேற்றம் இருக்கிறது. நம்மால் முடியும் என்று நம்பினால் நிச்சயம் அந்தக் காரியம் நினைத்தபடி எண்ண அலைகளால் நிறைவேறி விடும். நம் மனசுக்குள் தளராத நம்பிக்கை என்ற ஒரு ஜெனரேட்டர் இருக்கிறது, அதை ஆன் பண்ணினால் வேண்டிய மட்டும் நமக்கு சக்தியை உருவாக்கிக் கொடுக்கும். வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புபவர்கள் தங்கள் ஆழ் மனத்தில் நல்ல சிந்தனைகளை விதைத்துக் கொண்டே இருக்க வேண்டும். எப்பொழுதும் நல்ல சிந்தனைகள் நல்ல பலன்களையும், தீய சிந்தனைகள் தீய பலன்களையும் தரும் என்பதை மறந்து விடாதீர்கள்.

சிந்தனைகள் எப்பொழுதும் நேர்மையான பாதையில் இருக்கும் பட்சத்தில் யார் என்ன நினைப்பார்கள் என்று ஒரு

நிமிடம் கூட கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நிஜ வெற்றி பெற்றவர்களைக் கவனித்தால் நமக்கு இரண்டு விஷயங்கள் தெளிவாகப் புரியும். ஒன்று அவர்கள் எப்பொழுதும் நேர்மையான வழியிலேயே சென்று இருப்பார்கள். இரண்டு அவர்கள் எந்த சூழ்நிலையிலும் தங்கள் தன்னம்பிக்கையை இழந்திருக்கவே மாட்டார்கள். நமது இலட்சியம் மட்டும் மிக உயர்வாக இருந்தால் போதாது. அதை அடையும் வழியும் உயர்வாகவே இருக்க வேண்டும். ஒரு காரியத்தைத் தொடங்கும் போது இருக்கும் வேகம் அதை முடிக்கும் வரை இருக்க வேண்டும். ஒவ்வொரு அனுபவமும் நமக்கு ஒரு பாடமாக இருக்கும். எதிர்படும் ஒவ்வொரு தடையுமே நமக்கு ஒரு புதிய வழியை யோசிக்க வைக்கும். நம் கடமைகளை ஒழுங்காக நாம் செய்யும் போது, தீய வழிகளில் நாம் செல்வதை அதுவே நம்மை அறியாமல் கூட தடுத்து விடும். நேரத்தை வீணாக்குவதும், நம்பிக்கையை இழப்பதும் கிட்டத்தட்ட தற்கொலை முயற்சி தான். நேர்மையும் நியாயமும் இல்லாதவர்கள் தேடிக் கொள்ளும் புகழும், வெற்றியும் நிச்சயம் நிரந்தரமானது அல்ல. விரைவில் படு குழியில் தள்ளி விடும்.

நல்ல புத்தகங்கள் படிப்பது நல்ல அறிவாளிகளுடன் பேசுவதற்கு சமம். யாரிடம் பேசினாலும் அளவோடு பேசுங்கள். இனிமையாகப் பேசுங்கள். நல்ல ஒழுக்கத்தை விட மேலான ஒன்றை நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு கற்றுத் தந்து விடவே முடியாது. எப்படி ஒருவன் பௌத்த மொட்டை அடிப்பதால் மட்டும் துறவி ஆகி விட முடியாதோ, அதேபோல் கற்பனையில் ஆசைப்பட்டால் மட்டும் வாழ்க்கையில் முன்னேறி விட முடியாது. நம்பிக்கையோடு உழைப்பு என்ற பேராயுதத்தை கைகளில் எடுங்கள். அது வறுமை, சோம்பேறித்தனம், தீய குணம் அனைத்தையும் பொசுக்கி, உங்களை வெற்றிக்கு அழைத்துச் சென்று விடும்.

பொறுமையை விட மேலான தவம் இல்லை!
திருப்தியை விட மேலான இன்பம் இல்லை!
இரக்கத்தைவிட உயர்ந்த அறம் இல்லை!
மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதம் இல்லை!

தோல்விகள் சூழ்ந்தாலும் இருளை விளக்கும் கதிரவன் போல

அதனை நீக்கி அடுத்தடுத்த வெற்றி படியில் கால் அடி எடுத்து வையுங்கள். முடியும் வரை அல்ல. உங்கள் இலக்கினை அடையும் வரை. இந்த விடியல் உங்கள் வாழ்விலும் விடியட்டும். தனிமனித மாற்றமே நம் சமுதாயத்தின் மாற்றம்.

- திருமதி Dr. சூரிய கலா குமார் PhD



## கோயில்களில் தீர்த்தம் தருவது ஏன்?

வாழ்வியல் ஆதாரங்களில் தண்ணீருக்கு முக்கிய பங்கு உண்டு. திருக்குறளில் வள்ளுவர் நீரின்றி அமையாது உலகு என்கிறார். கோவிலுக்குச் செல்லும்போது நீராடி தூய்மையோடு செல்கிறோம். உடல் தூய்மையோடு உள்ளத் தூய்மையும் பெற வேண்டும் எனும் அடிப்படையில், தண்ணீர் தீர்த்த பிரசாதமாக வழங்கப்படுகிறது. அதனை கையில் வாங்கி, தலையில் தெளித்துப் பருக வேண்டும்.

– A. கார்த்திகா B.Sc., மதுரை.


உ
சிவமயம்
அருவியூர் வடக்குவளவு நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!
உஷா ஜுவல்லர்ஸ் பைனான்ஸ் டெக்ஸ்
77-78, மீனாட்சி டவர்ஸ், P.T.ராஜன் ரோடு,
பீபீ குளம், மதுரை-2.
:7373073738

## பாடல் 199 முதல் தந்திரம் – 7 – புலால் மறுத்தல் (அசைவம் சாப்பிடாமல் இருத்தல்)

திருமந்திரம் பாடல் - 199 வழி மந்திரம்



பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தினுள்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பார்களே
மல்லாக்கத் தள்ளி மறைத்திடுவான் கூற்றுவனே
பொல்லா புலாலை புசித்தலால்-நல்லதாய்
ஊனை உயத்திட ஊனையே உண்ணாதே
ஊனை ஒதுக்கல் உயர்:

**விளக்கம்**

பிற உயிர்களைக் கொன்று உடலிலிருந்து பெறுவதாலும் மனித உடலுக்கு தீமை தருவதாலும் பொல்லாத புலாலை (அசைவத்தை) விரும்பிச் சாப்பிடும் கீழ்மையான மக்களை அவர்கள் இறக்கும் தறுவாயில் அவர்களைச் சுற்றி நின்ற அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எமதர்மனின் தூதுவர்கள் வந்து கரையானைப் போல இறுக்கமாகப் பற்றி இழுத்துக் கொண்டு போய் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் கொடிய நரகத் தீயினுள் அவர்களின் முதுகு கீழே பட முகமும் உடலும் மற்றவர்கள் பார்க்கும்படி மேலே தெரிய மல்லாக்கத் தள்ளிவிட்டு அவர்கள் சுடும் தீயிலிருந்து தப்பிச் செல்லாமல் இருக்க கதவுகளையும் மூடிவிடுவார்கள்.

கருத்து :

பிற உயிர்களுக்குத் துன்பம் தந்து பெற்ற கொடிய புலாலை விரும்பி சாப்பிடுபவர்கள் இறந்த பின் கொடிய நரகத் தீயில் எப்போதும் வெந்து கொண்டே இருப்பார்கள்.

**– கோவை கு. கணேசன்**

# வாசகர் குரல்

வாசகர் குரல்: 161-1

1. செப்டம்பர் 2022 நகரத்தார் குரலில் பக்கம் எண். 62-ல் வெளி வந்துள்ள வேளாண்மைத் துறையில் அதிக விருதுகளைப் பெற்ற பேராசிரியர் மாப்பிள்ளை திரு அ.சுப. மயிலப்பா அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்று கூறுவதில் மிகவும் பெருமையடைகின்றோம். வேளாண்மைத் துறையில் அரிய சாதனைகளை செய்துவரும் அவருடைய பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். அவருக்கு எனது சார்பாகவும், V. புதூர் அ.வ.ந. நகரத்தார் பெருமக்கள் சார்பாகவும் பாராட்டுக்கள்.
2. உயர்திரு சொ. வைத்திலிங்கம் அய்யா அவர்கள் எழுதி வெளி வந்துள்ள தாய்க்கு நிகரானவள் தாரம் என்ற கட்டுரை மிகவும் அருமை. பாராட்டுக்கள். நம் மனைவியும், நமக்கு அவர்களுடைய அப்பாவிற்கு கொடுத்த அன்பு, பாசம், மரியாதை கொடுத்தால் நல்லதொரு குடும்பமாக அமையும்.

**– திரு V. கணேசன் B.Sc., தலைவர், அ.வ.ந. சங்கம், V. புதூர்**

கொட்டாம்பட்டியில் ஓர் இனிய உதயம்
5.3.2020 முதல் - பேருந்து நிலையம் எதிரில்



# மணிவிழா தம்பதிகள்



05-09-2022 அன்று மணப்பாறையைச் சேர்ந்த திரு Rtn.PHF.Er. **M. சேதுராமன் B.E.,M.B.A., M.D.(Acu.) – திருமதி சாந்தி B.Com.** தம்பதியரின் அறுபதாம் ஆண்டு நிறைவு **சஷ்டியப்த பூர்த்தி விழா** (மணிவிழா) மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ அபிராமி அம்பாள் உடனுறை அருள்மிகு ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.


தகவல் : S. விஜய் B.E. ABUDHABI, UAE

மணிவிழா கண்ட தம்பதிகள் நீடித்த ஆயுளும், குறைவற்ற செல்வமும், நல்ல ஆரோக்கியத்துடன் வளமான வாழ்வும் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.


**– அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**




## மாரத்தான் ஓட்டத்தில் சாதனையாளர்




1. 27-08-2022 அன்று ஐதராபாத்தில் நடைபெற்ற மாரத்தான் ஓட்டத்தில் பணப்பாக்கூருடையார் தெய்வத்திரு சொக்கலிங்க செட்டியார் - நலமுடன் சொ. பொற்செல்வி ஆச்சி இவர்களது புதல்வன் திரு **சொ. மகாபிரபு** (வயது 38), தன்னார்வலராக கலந்து கொண்டு 21 கிலோ மீட்டர் ஓடி சாதனை புரிந்துள்ளார்.



2. மேற்படி மாரத்தான் ஓட்டத்தில் பொன்னமராவதி அன்பு வணிக நிலையம், திரு ம. குமார் - இராஜ ராஜேஸ்வரி தம்பதியரின் மகன் திரு **கு. அருண்குமார்** B.E., (வயது 26) 10 கிலோ மீட்டார் ஓடி சாதனை புரிந்துள்ளார்.

**தகவல் : அன்பு வணிகநிலையம், பொன்னமராவதி.**

## சைக்கிள் ஓட்டுவதில் சாதனை புரிந்த நம்மவர்




பணப்பாக்கூருடையார் தெய்வத்திரு சொக்கலிங்க செட்டியார் - நலமுடன் சொ. பொற்செல்வி ஆச்சி இவர்களது புதல்வன் திரு சொ. மகாபிரபு (வயது 38), (அன்பு வணிக நிலையம், பொன்னமராவதி)

18-09-2022 அன்று திருச்சி - ஆத்தூர் - திருச்சி இடையே 200 கி.மீ. தூரத்தை சைக்கிளில் கடந்து சென்று சாதனை படைத்துள்ளார்.

**தகவல்: திரு A.P. ஸேதுராமன், இணைத்தலைவர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்/ தலைவர், அ.வ.ந. சங்கம், கோவை.**

**திரு சொ. மகாபிரபு, திரு கு. அருண்குமார் இருவரும் மென்மேலும் பல்வேறு சாதனைகள் புரிந்து விருதுகள் பெற வாழ்த்துகிறோம்.**

**- அ.வ.ந. கல்வி வளர்ச்சிக்கழக நிர்வாகிகள்**

# இறைவன் நமக்கு வேண்டும்

**கோவை கவிஞர் நம்பிக்கை நாகராஜன் அவர்களின்
ஆன்மிக ஆய்வு நூல் கட்டுரையிலிருந்து....**



"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி" என்று சொல்வதுண்டு. ஏன் கல் முதலில் தோன்றியது என்று சொன்னார்கள். ஆமாம் கல்தான் முதலில் தோன்றுகிறது. பிறகுதான் மண் தோன்றுகிறது. சரி கல் எங்கிருந்து தோன்றுகிறது. அதையும் குறித்து வைத்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

சூரியனின் சுழற்சியின் வேகத்தில் வெடித்துச் சிதறிய துகள்கள்தாம் கல் என்பதை ஆய்வாளர்களும் சொல்கிறார்கள். ஆன்மீகவாதிகளும் சொல்கிறார்கள். சரி, சூரியனிலிருந்து தோன்றிய துகள் நின்று நிலைப்பதற்கு ஒரு இடம் வேண்டுமல்லவா. அந்த மாயத்தை இறைவன் செய்கிறான். வெடித்துச் சிதறிய சூரியத் துகள்களை ஒன்றோடு ஒன்றை உரசச் செய்கிறான். அப்படி சூரியத் துகள் ஒன்றோடு ஒன்று உரசிக் கொள்ளும்போது உருவாகிறது மண். அந்த மண் கீழ் நோக்கிப் பாய்ந்து ..பாய்ந்து..நிறைந்து நிலைத்து நிற்பதுதான் இந்த பூமி. அதவாது பிரபஞ்சம் என்று சொல்லக்கூடிய அண்டம்.

நின்று நிலைத்துவிட்ட உலகம் என்ற அண்டத்திலேதான் ஒவ்வாரு உயிர்களாகத் தோன்றுகின்றன. ஐந்து வகை உயிரினங்கள் தோன்றியபின் கடைசியாக ஆறு அறிவு கொண்ட மனிதன் தோன்றுகின்றான். ஐந்து அறிவு கொண்ட உயிர்கள் பேசுவதில்லை. ஆறாவது அறிவு அதாவது பகுத்தறிவோடு மனிதன் பிறந்ததால் எல்லாவற்றையும் எல்லா வகையிலும் பகுத்துப் பார்க்கத் தொடங்கி அதன் பயனாய் பேசத் தெரிந்து கொண்டான். பகுத்துப் பார்க்கின்ற அறிவு மனிதனின் பிறப்போடு வந்ததால் அதற்குரிய செயல்பாட்டில் இடையறாது முயன்று எல்லா செயல்பாட்டிற்கும் உறுதுணையாக இருக்கின்ற ஆன்மீகத்திலும் தெளிந்து உயர்ந்து நிற்கின்றான்.

புல்லும் மானும் ஓரறி வினவே
நந்தும் முரலும் ஈரறி வினவே
சிதலும் எறும்பும் மூவறி வினவே
நண்டும் தும்பியும் நான்கறி வினவே
மாவும் புள்ளும் ஐயறி வினவே
மக்கள் தாமே ஆறறி வுயிரே

– தொல்காப்பியர்

உயிர்களின் பட்டியல் இப்படி போகிறது. மேலும் உயிர்களின் செயல்பாடுகளையும் விளக்குகிறார் தொல்காப்பியர்.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே இதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே

– தொல்காப்பியர்

மேலே உள்ள தொல்காப்பியரின் நூற்பாவில் சொல்லப்படும் செய்திகள் மிகவும் அற்புதமான அரிய செய்திகள் மட்டுமல்ல. இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழர்கள் ஆய்ந்தறியும் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்ற செய்தியும் அடங்கியிருக்கிறது. அந்த வகையில்... நிற்பது, நடப்பது, உண்பது, உறங்குவது இனப்பெருக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றும் உடல் ஈடுபாடு கொள்வது என்ற வகையில் மனிதர்களையும், விலங்குகளையும் பிரித்துப் பார்க்க எந்தத் தனித்தன்மையும் இல்லை என்பதே உண்மை.

ஆனால் விலங்கிலிருந்து மனிதனைத் தனித்துப் பிரித்துக் காட்டுவது ஒன்றே ஒன்றுதான். அந்த ஒன்றினால்தான் மனிதன் விலங்கிலிருந்து பிரிந்து தனித்து நிற்கிறான். ஆமாம்.

மனிதனுக்கு வரமாக ஆறாவது அறிவு என்ற ஒன்று கிடைத்தது. அப்படிக் கிடைத்த அந்த ஆறாவது அறிவைக் கொண்டு மிகப்பெரிய சக்தியாக, மிகப்பெரிய சாதனையாளனாக மனிதன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு இருக்கிறான். இந்த ஆறாவது அறிவை துணை கொண்டு முதலில் அவன் பேசப் பழகிக் கொண்டான். பேச்சிலிருந்து தொடங்கி இன்று மனிதன் செய்யாத சாதனைகளே இல்லை என்பதாகத்தான் சொல்ல வேண்டும்.

உலகின் எந்தத் துறையானாலும் அதன் உச்சியைத் தொடுவது மனிதன் மட்டுமே என்றால் உலக மனிதர்களுக்கே அது பொதுப் பெருமை ஆகிறது. அந்த அளவில் மனிதன் தன்னை உயர்த்திக் கொண்டு நிற்கிறான். இந்த ஆறாவது அறிவான பகுத்தறிவிற்கு மேல் அப்பாற்பட்டு ஒரு அறிவு இருக்கிறது. அது கணக்கில் ஏழாவது அறிவென்று சொல்லலாம். பெயர் சொல்லி அடையாளப்படுத்துவதென்றால் உணர்வு அறிவு என்பதே பொருத்தமாகும்.

பகுத்தறிவின் உச்சமாக இருப்பது உணர்வு அறிவு. அந்தப் பகுத்தறிவின் துணை கொண்டுதான் பலதுறைகளிலும் ஆய்வு செய்து பல கண்டுபிடிப்புகள் வழியாக மக்களுக்குப் பயன்பட எண்ணற்ற பொருள்கள் கிடைப்பதாகச் சொல்வோம். மேலெழுந்த முறையில் பார்த்தால் அது உண்மைதான். ஆனால் ஆழ்ந்து பார்த்தால் வேறொரு உண்மை அதில் ஒளிந்து கொண்டிருப்பதை உணரமுடியும். மனிதர்கள் நாம் உணருகின்ற அறிவின் தன்மையினால் உள்ளே உள்ளே உணர்ந்து பார்த்து அந்த உணர்வு அறிவில் தோன்றியக் கருத்துகளை குறித்து வைத்து அதில் தெளிவு கண்டு அதை மனதிற்குள் உருவகப்படுத்திக் கொண்ட பிறகுதான் ஓர் அரிய பொருளைச் செய்ய முற்படுகிறார்கள்.

இப்படி மனிதனும் மற்றும் உலகில் உள்ள எல்லா உயிரினங்களும் தொழில்துறைகளும் நிலை உயர்வதற்கும் உறுதுணையாக இன்றியமையாத நிலையில் இசைந்திருக்கும் அறிவியலின் மூலமாக இருப்பது ஆன்மீகம். ஆழ்ந்து சிந்திக்கிற நிலையைக் கற்றுத்தேற ஊற்றுக்கால்களாக இருப்பது ஆன்மீகம்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழாது உஞற்று பவர் -குறள் 620

என்பது வள்ளுவர் வாக்கு. சிந்தனையால் உந்தப்பட்டு அதன் உள்ளே சென்றுபார்க்கும் நிலை ஆன்மீகத்தில்தான் தொடங்கியது. ஆன்மீகத்தின் ஆழ்ந்து சிந்திக்கின்ற பழக்கத்ததை வைத்துக் கொண்டுதான் மனிதன் பலதுறைகளிலும் ஆய்வு செய்து பல கண்டுபிடிப்புகளைக் கொடுத்து மக்களுக்கு பயன்படுமாறு செய்கிறான். ஆய்வாளர்கள் என்ற பெயருள்ள மனிதன் மக்களுக்குப் பயன்படும் பொருள்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறான். ஆன்மீகவாதி என்ற பெயருள்ள மனிதன் நல்ல மனிதர்களை உருவாக்கி ஒட்டுமொத்த உலகத்துக்கே உதவுகிறான். உணர்வு அறிவைக் கொண்டுதான் ஆன்மீகவாதிகளும் இயங்குகிறார்கள்.

ஆன்மீகவாதிகளும், ஆய்வாளர்களும் மக்களுக்காக வேறு, வேறு பாதைகளில் சென்றாலும் சென்று அடைகின்ற இடம் உலகமக்களின் மேன்மை என்ற ஒரே இடத்துக்குத்தான் என்பதை உணர வேண்டும். ஆக மனித சமுதாயம் உயர்வடைய ஆய்வு வழியும் வேண்டும். ஆழ்ந்த அறிவால் உணரப்படுகின்ற ஆன்மீக வழியும் வேண்டும்.

ஆன்மீகம் என்று எடுத்துக் கொண்டால் இறைநிலையை இறைவனை முன் நிறுத்திதான் மிகுதியும் பேசப்படுகின்றது. சிந்தையில் ஒன்றுபட்டு ஒரே நோக்கமாக கருத்து வேறுபாடு இல்லாமல் பயணம் செல்லும் ஆன்மீகவாதிகள் கூட ஒரு கட்டத்தில் கண்டவர் விண்டிலர்! விண்டவர் கண்டிலர் என்று இறைவனைப் பற்றிச் சொல்கிறார்கள்.

இப்படி இறைவன் இருப்பதையும் இல்லை என்பதையும் அறுதியிட்டு உறுதியாகச் சொல்லமுடியாத நிலையில் இறைவன் நமக்கு வேண்டுமா? வேண்டாமா? என்கிற கேள்வி எழுகிறது. மனிதநேயம் மிக்க நல்ல ஒழுக்கமுள்ள நேர்மையான மனிதர்களை உருவாக்கும் ஆன்மீகமும் அதற்கு மூலமாக அமையும் இறைவனும் நமக்கு வேண்டும்.

**– கோவை கு. கணேசன்**

# கேள்விக்கென்ன பதில்



முருகன் ஒரு கார் டிரைவர். ஒரு நாள் அவன் ஒருவழிப் பாதையின் (No Entry) வழி சென்று கொண்டிருந்தார். அதனைப் பார்த்த போக்குவரத்து காவல் அதிகாரிகளும் கண்டிக்கவில்லை; பிடித்து அபராதமும் போடவில்லை; காவல்துறை ஏன் இப்படி அலட்சியமாக நடந்து கொண்டது?

**– சைதன்யா ஸ்ரீ கிருஷ்ணா,**
**S/o திரு சிவக்குமார் – ஜெயந்தி, திண்டுக்கல்**

குறிப்பு : 30.11.2022-ம் தேதிக்குள் சரியான பதில் அளிக்கும் முதல் ஒரு நபருக்கு ரூ. 50/- (ஐம்பது) பரிசு உண்டு.

பதில் அனுப்ப வேண்டிய முகவரி :

செயலாளர்,
அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகம்,
3, முதல் குறுக்குத் தெரு, நாட்டுக்கல் மெயின்ரோடு,
அழகப்பா காம்ப்ளக்ஸ் பின்புறம்,பொன்னமராவதி - 622 407
புதுக்கோட்டை மாவட்டம்.
வாட்ஸ்அப் எண் :
செயலாளர், மு. இராமலிங்கம், 99430 17232.

**அச்சிட்டோர் : சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்**
534 -ஏ, காமராஜர் சாலை, சிவகாசி - 626123.
போன்:04562-223315 இ.மெயில் suryaprint1998@gmail.com

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றைத் திருத்திஅமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியர்க்கு உரிமை உண்டு. குரலில் வெளியிடப்பெறும் செய்திகளுக்கும் கருத்துகளுக்கும் அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவார்கள். பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - பதிப்பாசிரியர்

# ஒருவர் தினசரி செய்ய வேண்டிய பழக்கங்கள்

1. அதிகாலை சூரிய உதயத்திற்கு முன் கண் விழிப்பது
2. காலையில் வெறும் வயிற்றில் இரண்டு அல்லது மூன்று டம்ளர் நீர் அருந்துதல்.
3. முப்பது நிமிடம் நடை பயிற்சி அல்லது உடற்பயிற்சி அல்லது யோகா செய்வது.
4. எந்த மதமாக இருப்பினும் காலையில் கடவுள் வழிபாடு
5. பெற்றோரை வணங்குதல்
6. கட்டாயம் காலை உணவு சாப்பிடுதல் அதற்கு நேரம் ஒதுக்குதல்
7. அன்று செய்ய வேண்டிய வேலைகளை முறைப்படுத்துதல்
8. படிக்கும் பருவமாக இருப்பின் முறையாக கல்வி பயிலுதல்
9. வேலைக்குச் செல்பவர் என்றால் முறையாக வேலைக்குச் செல்லுதல்
10. சக நண்பர்களுடன் நட்பு பாராட்டுதல்
11. எப்பொழுதும் நல்ல சிந்தனை கொள்ளுதல்
12. அடுத்தவர்களோடு அனுசரனையாக இருத்தல்
13. தினம் ஒரு நல்ல அல்லது ஒரு புதிய பாடம் கற்றல்
14. நாட்டு நடப்புகளை தெரிந்து கொள்ளுதல்
15. செய்தித்தாள், தொலைகாட்சி செய்தி அல்லது வானொலி செய்தி ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்
16. அலைபேசி உபயோகத்தை முடிந்த அளவு குறைத்துக் கொள்ளுதல்.
17. ஃபேஸ்புக், வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் போன்ற சோசியல் மீடியா உபயோகங்களை குறைத்துக் கொள்ளுதல்.
18. அலைபேசி விளையாட்டை குறைத்துக் கொண்டு நம் பாரம்பரியம் கொண்ட உடல் வேர்வை வரும் அளவுக்கு உள்ள விளையாட்டுக்கள் மற்றும் மனம் குளிர விளையாடும் விளையாட்டுக்கள் விளையாடுதல்.

19. பெற்றோர் மற்றும் குடும்பத்தாரிடம் நேரம் செலவு செய்தல்
20. தொலைகாட்சியில் ஒளிபரப்பப்படும் குடும்பத் தொடர்களை தவிர்த்து நல்ல இசை மற்றும் குழந்தை அறிவு நிகழ்ச்சிகளைப் பார்ப்பது.
21. அதிகம் தேநீர் – காபி குடிப்பதை தவிர்க்கவும்.
22. புறம் பேசுதல் தவிர்க்கவும்.
23. அரசு விதிகளை முறையாக பின்பற்றவும்.
24. இயற்கை அழகு சிதைக்காமல் இயற்கையோடு வாழ கற்றுக் கொள்ளுதல்
25. மன அமைதிக்கு புறம்பான எந்த செயலையும் செய்யாது இருத்தல்

எல்லாவற்றையும் கடைப்பிடிக்க முடியவில்லை என்றாலும் குறைந்தபட்சம் ஒரு பத்து நல்ல பழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

– ஆசிரியர் குழு

## கந்தர் அலங்காரம் ஒப்பிவித்தல் போட்டியில் முதல் பரிசு



தேவகோட்டையைச் சேர்ந்த 6-ம் வகுப்பு பயிலும் செல்வி ம. வர்ஷினி என்பார் தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாக் கழகத்தினர் 77 ஆம் ஆண்டு விழாவில் நிகழ்த்திய கந்தர் அலங்காரம் ஒப்புவித்தல் போட்டியில் சிறந்த முறையில் ஒப்புவித்ததற்காக முதல் பரிசு பெற்றுள்ளார்.

கந்தர் அலங்காரம் ஒப்பிவித்தல் போட்டியில் முதல் பரிசு பெற்ற செல்வி ம. வர்ஷினியை கல்வி வளர்ச்சிக் கழகம் பாராட்டி வாழ்த்துகிறது.

**– கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**



ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
1936
ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
பொன்னமராவதி | புதுக்கோட்டை
பட்டின் அற்புத படைப்புகள்

உ

வாழ்க வளமுடன்

Prop.
ALM. Natarajan

Estd : 2000

VSI

96795 57006
90959 06510

GSTIN : 35ABPPN2543RIZX



# வினாயகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ்

# VINAYAGA STEEL INDUSTRIES

**MFG. OF ALL TYPE STEEL FURNITURE & FABRICATIONS**

**Plot No. R/56, Industrial Estate, Dolly Gunj, Port Blair - 744 103**

Prop.
ALM. Natarajan

Estd : 1994

VA

96795 57006
90959 06510

# வினாயகா ஏஜென்ஸி

# VINAYAGA AGENCY



Commercial Wet Grinders & Motors, Mixer Grinder,
Table Top Grinder, Mixie, Feather Cleaning Machine.



**3 & 4, MB No. 195, MG Road, Junglighat, Port Blair - 744 103.**


**Book Post - Printed Matter**

To

From


அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளக்ஸ் பின்புறம்,
மெயின்ரோடு ரோடு, **பொன்னமராவதி,**
புதுக்கோட்டை மாவட்டம் - 622 407.


SURYA SVK Cell : 98421 24415